
விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com




சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 01 செவ்வாய்க்கிழமை (17.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 272

## தமிழர்களின் எதிர்காலத்தை இருள்மயமாக்கி விட்டோம்

### ஒப்புக்கொண்டார் அமைச்சர் டலஸ்



(யாழ்ப்பாணம்)

சிங்கள-தமிழ் இனவாத அரசியல்வாதிகளின் செயற்பாடுகளுக்கு கட்டுப்பட்டு தமிழர்களின் எதிர்காலத்தை இருள்மயமாக்கிவிட்டோம் என மிகவும் மனவேதனையுடன் யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்துள்ளார் இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும.

வரலாற்றில் பலதவறுகளைச் செய்துவிட்டோம். நாங்கள் உங்களுடையமொழியைக்கற்கவில்லை. கலாச்சாரத்தை மதிக்கவில்லை. கலாசாரத்தை விளங்கிக்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் நேற்றுக் காலை (23ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண தேர்தலில் கூட்டமைப்பே வெல்லும்

### நெதர்லாந்து தூதுவரிடம் யாழ் ஆயர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்களின் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் வெற்றி பெறும் எனத் தெரிவித்துள்ள யாழ்.ஆயர் வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, தேர்தலில் இராணுவம் தலையிடக் கூடாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தல் விஞ்ஞாபனத்தை பயன்படுத்தக்கூடாது

## த.தே.கூட்டமைப்பிற்கு அரசாங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை தேர்தலுக்குப்பின்னர் பயன்படுத்தக் கூடாது என அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையை பிளவுபடுத்த சர்வதேசம் முயற்சிக்கிறது

### பிரதமர் ஜயரத்ன குற்றச்சாட்டு

(கண்டி)

இலங்கையை இரண்டாக பிரிக்கும் முயற்சிகளில் சர்வதேச சக்திகள் ஈடுபட்டு வருகின்றது என பிரதமர் டி.எம்.ஜயரத்ன குற்றஞ்சாட்டியுள்ளார்.

கண்டி சங்காராஜபுர வல்பலா கொல்ல பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் இதனைக் கூறியுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை ஒரே நாடாக வைத்திருக்க வேண்டும் என்பதே அரசாங்கததின் ஒரே நோக்கம். அந்த நோக்கம் வெற்றியளிக்காதென்று சுட்டிக்காட்டும் வெளிநாட்டு சக்திகள் இலங்கையை இரண்டாக துண்டாடுவதற்கான பல்வேறு விதமான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

நாட்டுக்கு எதிரான வெளிநாட்டு சக்திகளின் அழுத்தங்களை தோற்கடிக்க வேண்டும். பயங்கரவாதத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட நாட்டை ஒரே நாடாக வைத்திருக்க வேண்டும் என்ற (23ஆம் பக்கம் பார்க்க)

## வாக்குச் சேகரிப்பிற்காக வடக்கில் பலவந்த முயற்சி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாகாண சபை உறுப்பினர் நிலைக்கு கீழிறங்கிச் சென்று கூட்டத்திற்கு கூட்டம் விருப்பு வாக்குகளை கேட்டுச் செல்வதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

வவுனியாவில் விடுதியொன்றில் நேற்று நடைபெற்ற ஊடகவியல்ளாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி (23ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களை துன்பத்தில் தள்ளுகிறார் சம்பந்தன்

(கொழும்பு)

சம்பந்தன் என்பவர் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் இருக்கும் வயதான மனிதர் எனவும் நாட்டில் இனவாத மோதலை ஏற்படுத்தி மீண்டும்தமிழ்மக்களுக்கு துன்பத்தை உருவாக்கிக் கொடுப்பதே அவரது தேவை எனவும் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், இனவாத மோதலை (02ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் உத்தரவுகளில் தலையிட முடியாது


(கொழும்பு)

ஜனாதிபதியின் உத்தரவுகளில் தலையிட மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை என மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் சிறிஸ்கந்தராஜா நேற்று (23ஆம் பக்கம் பார்க்க)







## தமிழர்களை துன்...

ஏற்படுத்தி நாட்டின் இளைய தலைமுறையினரை மீண்டும் துயரத்தில் தள்ளிவிடுவது சம்பந்தனுக்கும் அவரது அணியினருக்கும் பிரச்சினையில்லை. காரணம் அவர்கள் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் இருப்பவர்கள்.

வடக்கில் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக கூட்டமைப்பு தமக்கு ஆதரவான தமிழ் மக்களுக்கு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இது சட்ட விரோதமானது என்ற போதும் இது பற்றி தேர்தல் ஆணையாளரிடம் முறையிடப் போவதில்லை.

ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் மூலம் அவர் இதனை அறிந்து கொள்ள முடியும் என்பதால் தேர்தல் ஆணையாளரிடம் முறையிடவில்லை.

மாகாண சபைகளுக்காக தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியிடுவதில்லை என்றாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் விஞ்ஞாபனம் ஒன்றை வெளியிட்டு வடக்கில் சுயாட்சியை கோரியுள்ளது என்றார். (செ-11)


### வீடு வாடகைக்கு

கொய்யாத்தோட்டம் புதுவீதி, யாழ்ப்பாணத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடு வாடகைக்கு

T.P: 077 936 1427 (3969)

### விற்பனைக்கு

- LG XXXX இலக்கம் கொண்ட ஐஸ்கிறீம்வேன் (TATA BUdy)
- ஐஸ்கிறீம் பாத்கொம்ரேஷர் சிங்கல்லேஸ் மோட்டோர்
- ஜெனரேட்டர் டீசல் 10,000 KV (இந்தியன்)
- டீப்பிரீசர்
- லேன்சர் கார் 11 SRI 1729
- ஜெனரேட்டர் 200 KV (சைனா)

தொடர்புகளுக்கு: 0771573997

### தவறிவிட்டது

குப்பிளான் தெற்கு ஞானவைரவர் கோயிலடியைச் சேர்ந்த தியாகு அனிதா ஆகிய என்னுடைய 897691469V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை யாழ்.துரையப்பா அரங்கின் வாயிலில் வைத்து 14.09.2013 அன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தொடர்புகளுக்கு: 0752422310


### அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



**அமரர் பொன்னையா தங்கராசா**

கடந்த 16.08.2013 ஆம் திகதி சிவபதடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 17.09.2013 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

சந்தா தோட்டம். புலோலி வட கிழக்கு. புலோலி


## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாபெரும் தேர்தல் பரப்புரைக்கூட்டம்

இலக்கம் 3இல் போட்டியிடும் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர்

டாக்டர்

**கந்தசாமி திருலோகமூர்த்தி**

அவர்களை ஆதரித்து நடைபெறும் நிகழ்வில்

சிறப்பு விருந்தினர் : கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்

**செல்வம் அடைக்கலநாதன்**

இலங்கையின் முதல்தர இசைக்குழுவான ராகம்ஸ் இசைக்குழுவினருடன் இன்னிசை வேந்தன் ஜே. ஆர். சுகுமார் இணைந்து வழங்கும்

**மாபெரும் இன்னிசை நிகழ்வும்**

நேரம்: 4:30 மணி

இடம் : கனகபுரம் விளையாட்டு மைதானம்

X 3

(E-4809)

SAVE 35,000 in Diploma

ACCA THE GLOBAL BODY FOR PROFESSIONAL ACCOUNTANTS

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஒரே ஒரு ACCA Gold Approved அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

[ அதி சிறந்த கற்பித்தலுக்கான அங்கீகாரம் ACCA U.K]

K-AIMS

புதிய பிரிவுகள் 24th September முதல் கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களுடன்

35-1/1, Upatissa Road, Colombo 04
3-1/2, Sirambiyadi Lane, Jaffna

JAFFNA 0773 722 104 021 221 9422

COLOMBO 0772 555 814

CIMA

அதி சிறந்த வசதிகளுடன் கூடிய முற்றிலும் மாறுபட்ட முறையில், தொழில் சார் கற்கைநெறியில் அனுபவம் உள்ள விரிவுரையாளர்களுடன் CIMA-UK கற்கைநெறி இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

K-AIMS

புதிய பிரிவுகள் 25th September முதல் கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களுடன்

35-1/1, Upatissa Road, Colombo 04
3-1/2, Sirambiyadi Lane, Jaffna

JAFFNA 0773 722 104 021 221 9422

COLOMBO 0772 555 814

## வட மாகாண சபைத் தேர்தல் -2013
## யாழ். மாவட்டம்

எங்கள் தலைவர் தோழர் தேவாவிற்கு வலுச் சேர்க்கும் எங்கள் கமல் தோழருக்கே

**வெற்றி**



**க. கமலேந்திரன் (தோழர் கமல்)**

(யாழ். மாவட்ட அமைப்பாளர்)

X 10

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP)

வேலணை – ஊர்காவற்றுறை பிரதேச வாழ் மக்கள்

(E-080)

## வட மாகாண சபைத் தேர்தல் -2013
## யாழ். மாவட்டம்

எமது மக்கள் தோற்றுப் போனவர்களில்லை போராட்டங்களை தவறாக வழி நடத்தியவர்களே தோற்றுப் போனவர்கள்.

உணர்ச்சியும், உதவாத பொய்யும் பேசி எமது மக்களை மீண்டுமொரு இருண்ட யுகத்துக்கு இழுத்துச் செல்லும் முயற்சியை நாம் இணைந்து முறியடிப்போம்.



வடக்கின் வசந்தத்தை வாழ்வின் வசந்தமாக்குவோம்


**சி. தவராசா (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)**

(முதன்மை வேட்பாளர்)

X 7

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP)

(E-081)



(E/009)

சீ.வீ.கே.சிவஞானம்

(முன்னாள் மாநகர சபை ஆணையாளர்,
துணைப் பொதுச் செயலாளர்-இலங்கைத் தமிழரசுக் கட்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு


## விக்கிரமபாகு கருணாரட்ன மீது புத்தளத்தில் தாக்குதல்

புத்தளம், நுரைச்சோலை பிரதேசத்தில் நேற்றுமுன்தினமிரவு தாக்குதல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

நவசம சமாஜக் கட்சியின் தலைவரான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தேர்தல் பிரசார துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்த போது இவர் மீதும் இவரது ஆதரவாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இனந்தெரியாத குழுவொன்றே இவர்களைத் தாக்கினர் என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தின் போது புத்தளம் மாவட்ட அஸாத் சாலியின் தேசிய ஐக்கிய முன்னணியின் கீழ் வட மேல்மாகாணசபை தேர்தலில்போட்டியிடும் புத்தளம் மாவட்ட பிரதான வேட்பா ளரான மொஹமட் பௌரோஸ் காயமடைந்துள்ளார்.

அரச தரப்பு குண்டர்களே தம் மீதும் தமது ஆதரவாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தியதாக, கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார். (அ-2)


வடமாகாண சபைத் தேர்தல் 2013

யாழ். மாவட்டம்



கார்த்திகேசு நடராசா
விந்தன் கனகரத்தினம் MMC

(யாழ்.மாநகர சபை உறுப்பினர்)

யாழ். மாவட்ட மக்கள் சேவைக்கு மகத்தான ஒரு மனிதனாக வினைத்திறன் கொண்ட செயல் வீரனாக இருந்து மக்களுக்காக பணியாற்றக் கூடிய ஆற்றல் மிக்க சக்தியாக....

12

இலங்கைத் தமிழரசுக் கட்சி X 12

(E-016)



வடமாகாண சபைத் தேர்தல் 2013

(கிளிநொச்சி மாவட்டம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி



X 3

டாக்டர் கந்தசாமி
திருலோகமூர்த்தி

(EC/4897)


தமிழினத்தின் தன்மானக் குரல்
கிளிநொச்சியின் உரிமைக் குரல்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



வடமாகாண சபைத் தேர்தல் 2013

கிளிநொச்சி மாவட்டம்



60 வருட கால
சுயநலமற்ற அரசியல்
அனுபவத்தை
மீண்டும் பெற்றிட....

வீ.ஆனந்தசங்கரி

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)

X 2

(CE/4894)



வட மாகாண சபைத் தேர்தல் -2013

முல்லைத்தீவு மாவட்டம்



வாக்குகளால்
தாக்குவோம்!
வரலாறு படைப்போம்!!

இலங்கை தமிழரசுக் கட்சி

துரைராசா ரவிகரன்

X 2


(E-062)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு



வட மாகாண சபைத் தேர்தல் -2013

கிளிநொச்சி மாவட்டம்





தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

இலங்கை தமிழரசுக் கட்சி

பூ. தர்மகுலசிங்கம்

(முன்னாள் முழங்காவில் கமநல சேவை நிலையத் தலைவர்)

X 6

(EC-4805)



எம்மண், எம்மக்கள், எம்முரிமை

உங்கள் தெரிவு

க.வி.விக்னேஸ்வரன்


(ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர்)

முதன்மை வேட்பாளர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(EC-4899)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

X 10












# ஆளும் தரப்புடன் இணைந்து அபிவிருத்தியை பெறுவோம்

## வேட்பாளர் அங்கஜன் அழைப்பு

எமது கடந்த கால அரசியல் போராட்டங்களில் நாம் கண்டவை என்ன? இன்று அப்போராட்டங்களினால் எம் மக்களுக்கு கிடைத்த நன்மைகள் தான் என்ன? அதற்காக நான் இப்போராட்டங்களைத் தவறாக கூறவில்லை. ஆனால் அவை பயனற்று போய்விட்டன.

இனியும் போராட எம்மால் முடியாது. இளைப்பாறுவோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் ஐக்கிய மக்கள் சுத ந்திர முன்னணியின் வட மாகாண சபைத் தேர்தல் வேட்பாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அராலியில் அண்மையில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே அவர் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வட்டுக் கோட்டை தொகுதியில் அமைந்துள்ள அராலி பிரதேச மக்கள் மத்தியில் பேசுவதில் நான் பெருமை அடைகின்றேன். வட்டுக்கோட்டைத் தொகுதியில் என்னால் பெருமளவிலான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் நான் வெற்றி பெறவில்லை. அதற்காக உங்களை விட்டு நான் செல்லவுமில்லை. கடந்த 3 வருடங்களாக எமது மக்களின் சுய அபிவிருத்திக்காக போராடி வருகிறேன்.எம் மக்களின் அன்றாட பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் போராடி வருகின்றேன்.

எம் மூத்த சந்ததி போராடியது. நாமும் போராடினோம். எம் எதிர்கால சந்ததியும் போராட வேண்டுமா? இவ்வளவு காலமும் பின்தங்கி இருந்தது போன்று இனியும் எம் பிரதேசம் அபிவிருத்தியில் பின்தங்கி இருக்க வேண்டுமா? இல்லை.

அந்த நிலைமை மாற வேண்டும். அதற்காக நாம் இப்போது செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று தான். ஆளும் தரப்போடு இணைந்து போய் எமக்கான அபிவிருத்தியை பெற்று அதனூடாக எமது உரிமையை பெற்றுக் கொள்வதுதான் நல்லது. எனவே இம் மாகாண சபையில் அபிவிருத்தியை எவர் மேற்கொள்ள முடியுமென இனம் கண்டு அவர்களுக்கு வாக்களிப்போம் என்றார்.












# ஆட்கடத்தலுடன் தொடர்புடைய நபர்களிடம் கடும் விசாரணை


(கொழும்பு)

சட்டவிரோதமாக இலங்கையர்களை அவுஸ்திரேலியாவுக்கு கடல் வழியாக அனுப்பி வைத்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கடற்படை அதிகாரி மற்றும் செல்வந்த வர்த்தகர் ஆகியோரின் வங்கிக் கணக்குகள் குறித்து விசாரணைகளை நடத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை கடற்படையைச் சேர்ந்த லெப்டினட் கொமாண்டர் உட்பட கைது செய்யப்பட்டுள்ளவர்கள், எவ்வளவு தொகை பணத்தை மோசடி செய்துள்ளனர் என்பதை அறிய 243 வங்கி கணக்குகளை ஆராய நீதிமன்றத்தின் அனுமதியைக் கோரவுள்ளதாக மாத்தறை குற்றத்தடுப்பு பொலிஸார் கூறினர்.

இந்த ஆட்கடத்தல் வர்த்தகத்தின் தலைவர் எனக் கூறப்படும் கிண்ணியாவைச் சேர்ந்த மீன் வர்த்தகர் 2010 ஆம் ஆண்டு முதல் படகு மூலம் இலங்கையில் இருந்து ஆட்களை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வந்துள்ளார் என கூறப்படுகிறது.

அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் செல்லும் நபர் ஒருவரிடம் குறைந்தது 6 இலட்சம் ரூபா முதல் 12 இலட்சம் ரூபா வரையான பணம் அறிவிடப்பட்டிருக்கலாம் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)



வட மாகாண சபைத் தேர்தல் -2013
முல்லைத்தீவு மாவட்டம்
தமிழ்த் தேசிய கூட்டமைப்பு
மக்களின் தேவை,
உரிமை, அபிவிருத்தி
அதுவே எனது சேவை
இலங்கை தமிழரசுக் கட்சி
ஆண்டியையா- புவனேஸ்வரன்
(அகில இலங்கை சமாதான நீதவான்)
X 1
(E058)



வடமாகாண சபைத் தேர்தல் 2013
முல்லைத்தீவு மாவட்டம்

வீ.கனகசுந்தரசுவாமி
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
போரினால் சிதைக்கப்பட்ட முல்லைத்தீவு
மாவட்டத்தினை மீண்டும் கட்டி எழுப்பி எம்மை
நாமே ஆட்சி செய்திட சிந்தித்து வாக்களிப்பீர்...
4
இலங்கை தமிழ் அரசுக் கட்சி X
(E-045)



வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
முல்லைத்தீவு மாவட்டம்


சிதைந்த கனவுகளை
நனவாக்குவோம்...
தமிழர் பிரதிநிதித்துவத்தை காப்பதற்கு குடும்பத்தில்
ஒருவர் ஐ.தே.கட்சிக்கு வாக்களியுங்கள்
X
ஐக்கிய தேசியக் கட்சி
2
(EC-4801)
முல்லைத்தீவு மாவட்ட தலைவர்
தினேஷ் ரவிச்சந்திரராஜா



வட மாகாணசபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்

தடைகளைத் தாண்டி
உரிமைகளை
வென்றிட....

(EC-4804)
எமக்கு ஓர் சர்வதேச விவகார நிபுணர்
கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்
B.A Hons (Pol Sc), M.A., Ph.D விரிவுரையாளர்
X 4
இலங்கைத் தமிழரசுக் கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

# இன்று ஒரு தகவல்

## வேதாந்த விளக்கம்

ஒரு பெரியவர் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவரிடம் ஒரு பை இருந்தது. அதில் பணம் நிறைய வைத்திருந்தார்.

அவர் களைப்பினால் கண்ணை மூடும் நேரம் பார்த்து, ஒருவன் மெதுவாக அவரருகே வந்தான். வந்து நைசாக அந்தக் கைப்பையை பிடுங்கிக் கொண்டு ஓடப் பார்த்தான். அதற்குள் பக்கத்திலிருந்தவர்கள் சத்தம் போட பெரியவர் முழித்து விட்டார்.

உடனே எழும்பி அவன் மீது பாய்ந்து பையை மீட்டுக் கொண்டு வந்தார். அதன் பின்னர்தான் அவருக்கு நிம்மதி!

இதுதான் இயல்பு!

இதைவிட்டு விட்டு, "பணப்பையைத் தானே எடுத்துக் கொண்டு போகிறான்... போனால்போகட்டும்! அவனும்மனுஷன்தானே!" என்று வேதாந்தம் பேச மாட்டார்.

அப்படிப் பேசினால் அவர் வேதாந்தத்தை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று அர்த்தம்.

இதை ஸ்ரீராம கிருஷ்ணர் ஒரு கதை சொல்லியிருக்கிறார்.

ஒரு காட்டில் ஒரு சாது இருந்தாராம். அவருக்குப் பல சீடர்கள். ஒரு நாள் அவர்களையெல்லாம் கூப்பிட்டு வைத்து உபதேசம் பண்ணினார்.

"இந்த உலகத்தில் இருப்பது எல்லாமே கடவுளுடைய வடிவங்கள். அதை நீங்கள் எல்லோரும் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்! அதை புரிந்து கொண்டு எல்லோரையும் வணங்க வேண்டும்!" என்றார்.

எல்லா சீடர்களும் அக்கறையாக அதை மனதில் வாங்கிக் கொண்டார்கள். ஒரு நாள் ஒரு சீடன் விறகு பொறுக்குவதற்காக காட்டுக்குப் போனான்.

அப்பொழுது சிலர் "மதம் பிடித்த யானை ஒன்று வருகிறது. எல்லோரும் ஓடிப்போய்விடுங்கள்" என்று கத்திக் கொண்டு ஓடி ஒளித்தார்கள்.

சில பேர் மரத்தில் ஏறிக் கொண்டார்கள்.

ஆனால் அந்த சீடன் மட்டும் நகரவேயில்லை!

"நான் எதற்காக ஓட வேண்டும்? நானும் கடவுள். இந்த யானையும் கடவுள்!" என்று நினைத்துக் கொண்டு அசையாமல் அந்த இடத்திலேயே நின்று விட்டான்.

யானை அருகில் வந்ததும் கையிரண்டையும் மேலே தூக்கி துதிப்பாடல் ஒன்றை பாட ஆரம்பித்தான்.

யானைப் பாகனும் "ஓடிப் போய் விடு" என்று கத்தினான். அந்த சீடனுக்கு அதெல்லாம் பெரிதாகப்படவேயில்லை! எதையோ முணுமுணுத்துக்கொண்டே நின்றான்.

இவன் கையிரண்டையும் மேலே தூக்கிக்கொண்டு நின்றது யானைக்கு வசதியாகப் போய்விட்டது. அப்படியே வேகமாக துதிக்கையில் சுருட்டி வளைத்து ஒரு பக்கமாக எறிந்து விட்டுப் போய் விட்டது.

"அம்மாடி!" என்று கத்திக் கொண்டே போய் விழுந்தான். ஆச்சிரமத்தில் இருந்தவர்கள் இதைக் கேள்விப்பட்டு ஓடி வந்து ஆச்சிரமத்துக்கு தூக்கி கொண்டு போனார்கள்.

இவன் மெதுவாக கண்ணைத் திறந்து பார்த்தான். அப்பொழுது சீடனில் ஒருவன் "யானை வந்தது தான் உனக்குத் தெரியுமே! நீ ஏன் அங்கிருந்து ஓடவில்லை?" என்றான்.

அதற்கு இவன், "உலகத்தில் உள்ள எல்லாமே கடவுளின் வடிவங்கள் என்று தானே நம் குருநாதர் நமக்கு சொல்லிக் கொடுத்தார். அது தான் யானையைப் பார்த்ததும் கடவுள் தான் வருகிறார் என்று நினைத்துவிட்டேன்" என்றான்.

இதைக் கேட்ட குருநாதர்,

"அது சரி... நீயும் கடவுள் தான்! யானையும் கடவுள் தானே! ஆனால் அந்த யானை மீது உட்கார்ந்திருந்த பாகனும் கடவுள் தானே! அந்த கடவுள் ஓடிப்போ என்று எச்சரிக்கை கொடுத்ததே! அந்த வார்த்தையில் உனக்கு ஏன் நம்பிக்கை வரவில்லை?" என்று கேட்டார்.

அப்பொழுது தான் சீடனுக்கு தான் செய்த தவறு விளங்கியது. வேதாந்தத்தை சரியாக புரிந்து கொள்ளாததால் வந்த விளைவு தான் இது!

வேதாந்தி ஒருவர் ரயிலில் பிரயாணம் செய்தார். அவர் கையில் ஒரு சூட்கேஸ் இருந்தது.

அந்த சமயம் பார்த்து ஒரு திருடன் அதை பறித்துக் கொண்டு ஓடினான். எல்லோரும் சத்தம் போட்டார்கள். இவர் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளவேயில்லை "போனால் போகட்டும் விடுங்கள்! பாவம் பிழைத்துக் கொள்ளட்டும்!" என்றார்.

இவர் தான் உண்மையான வேதாந்தி என்று நினைத்து எல்லோரும் காலில் விழுந்து வணங்கினார்கள். ஆனால் அவர்கள் அத்தனை பேருக்கும் ஒரு உண்மை தெரியாது! அதாவது அந்த சூட்கேஸில் இருந்தது முழுக்க கள்ள நோட்டு என்று!.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தேர்தல் காலத்தில் அரச வளங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன

## புத்திஜீவிகள் ஒன்றியம் தெரிவிப்பு

இம்முறை மாகாண சபைத் தேர்தலில் அமைச்சர்களின் உறவினர்கள் போட்டியிடுவதால் அதிகளவிலான அரச வளங்கள் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவதாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான புத்திஜீவிகள் ஒன்றியம் தெரிவிக்கின்றது.

இந் நிலைமையை வட பகுதியில் அதிகமாக காணமுடிவதாக ஒன்றியத்தின் பிரதம செயலாளர் கலாநிதி அனுர சேனாநாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

விசேடமாக வட பகுதியில் அமைச்சர்களின் இணைப்புச் செயலாளர்கள் ஆலோசகர்கள் உள்ளிட்டவர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றமையால் அந்த அமைச்சர்களின் அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் மனித வளங்கள் உள்ளிட்ட அனைத்து வளங்களும் அதிகமாக பாவிக்கப்படுகின்றன.

இவை குறித்து ஆராய்ந்து பார்க்கின்றபோது பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, வர்த்தக மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு, விளையாட்டுத்துறை அமைச்சு, காணி அமைச்சு, வீடமைப்பு பொறியியல் மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, கலாசார அமைச்சு, பிரதம அலுவலக சொத்துக்கள் ஆகியன பெருமளவு பயன்படுத்தப்படுகின்றன.

அதேபோன்று வட மாகாண ஆளுநர் அலுவலக சொத்துக்களும் மனித வளங்களை வெளிப்படையாகவே பாவிக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த விடயம் தொடர்பில் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் கருத்துத் தெரிவிக்கையில், இந்தத் தேர்தலில் பொதுச் சொத்துக்கள் தேர்தல் நடவடிக்கைகளுக்காக தவறான முறையில் பாவிக்கப்படுவதாக 183 முறைப்பாடுகள் கிடைத் துள் ளன.

அதிகாரத்திலுள்ள அரசாங்கமே பொது சொத்துக்களைப் பயன்படுத்துகின்றது. விசேடமாக வட மாகாணத்தில் பொதுச் சொத்துக்கள் பயன்படுத்துவதாக தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு முறைப் பாடு செய்து ள்ளது.

ஆளுநராக இருந்து கொண்டு தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஒருவர் 22 ஆம் திகதி உருவாக்கப்படுகின்ற மாகாண சபைக்கு ஆளுநராக செயற்பட முடியாது.

இது சட்டம் தொடர்பான சிக்கல் அல்ல. அதையும் விடவும் அரசியல் கலாசாரம் ரீதியான சிக்கல். இதே வேளை, சில அரசியல்கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தமது பிரசார நடவடிக்கைகளுக்காக அரச வளங்களைப் பயன்படுத்தி வருகின்றமையை காண முடிந்ததாக ரிரான்ஸ் பெரன்ஸி இன்டர்நஷனல் நிறுவனம் தெரிவிக்கின்றது.

அரச திட்டம் எனத் தெரிவித்து தேர்தல் நடைபெறுகின்ற மாகாணங்களில் பல்வேறு வகையான வைபவங்கள் நடத்துதல் மற்றும் தேர்தல் பிரசார கூட்டங்களை நடத்துதல் என்பன அமைச்சர்களின் ஒத்துழைப்புடன் இடம்பெறுகின்றமை இதற்கான காரணம் என அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# தேர்தல் விஞ்ஞாபனத்தினூடாக சுயாட்சி கோருகிறீர்களா? - விமல்

நாட்டில் இனவாதத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களுக்கு மீண்டும் கவலையிலாழ்த்துவது சம்பந்தனின் தேவையாகவுள்ளது என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

மாகாண சபைத் தேர்தலுக்கு அரசாங்கமே தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடாதுள்ள நிலையில் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டு சுயாட்சி கோருகிறது. விக்கினேஸ்வரன் தமிழ் மக்களின் விருப்பத்தின் பேரில் நியமிக்கப்படவில்லை எனவும் நவநீதம்பிள்ளையும் இவருடைய குழுவில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வெள்ள முள்ளிவாய்க்காலில் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என நவநீதம்பிள்ளை கூறியுள்ளதாக தமிழ் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது. வடக்கில் கூட்டமைப்பு ஆட்சி அமைத்து நிபந்தனை விதிக்கும் போது 13 ஆவது திருத்தம் குறித்து அரசாங்கத்திலுள்ள சிலர் தீர்மானம் எடுப்பர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் , | 50 | 50 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 - 140 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 60 | 80 |
| தக்காளி | 120 | 70 | 60 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 50 | 40 |
| கோவா | 60 | 60 | 80 | 60 |
| கரட் | 60 | 80 | 100 | 120 |
| பூசணி | 20 | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 40 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 120 - 140 | 120-160 | 160 |
| பெரிய வெங்காயம் | 60 | 90 | 130 | 100 |
| பாகற்காய் | 50 | 70 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 80 | 80 |
| பயற்றங்காய் | 120 | 140 | 80 | 100 |
| லீக்ஸ் | 100 | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 100 | 150 | 40 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 60 | 120 | 100 |
| போஞ்சி | 120 | 110 | 100 | 140 |
| கீரை - 1 பிடி | 10 | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 450 | 240 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 - 50 | 45 | 40-50 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 | 140 |

## இராசி பலன்

17.09.2013
(புரட்டாதி 01, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 8.49 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 9.16 மணிவரை
இராகுகாலம் 3.03-4.33 மணிவரை
சுபநேரம் 10.33-12.03 மணிவரை
பிரதோச விரதம்

**மேடம்** ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**இடபம்** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், ஆரோக்கியம் சீராகி உற்சாகப் படுத்தும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**கடகம்** கவலைகள் தீர பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், வருமானத்தைவிட செலவுகள் அதிகமாகும், சிலர் உங்கள் மீது கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

**சிங்கம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சிதரும், பயணங்களால் பலனுண்டு, குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், அபூர்வ சந்திப்புண்டு.

**கன்னி** மறைமுகப் போட்டிகள் மாறும், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உடல்நலம் சீராகும்.

**துலாம்** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிறர் உதவியுண்டு.

**விருச்சிகம்** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், சந்தித்த நண்பர்களால் சந்தோசமான தகவல்கள் வந்து சேரலாம், உறவினர் வருகையுண்டு, புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், பயணங்களால் பலனுண்டு, அந்நியர் சந்திப்புண்டு.

**மகரம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பொதுவாழ்வில் புகழ்கூடும், வருமானம் திருப்திதரும், எதிர்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கும்பம்** தொழில் நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், நேற்றைய பிணக்குகள் இன்று முடிவுக்கு வரலாம், விருப்பங்கள் நிறைவேற பரம்பொருளை வழிபடவேண்டிய நாள்.

**மீனம்** உணர்ச்சிவசப்படும் சூழ்நிலை உருவாகும், பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம், தொழிலில் அதிக பிரயாசை காட்ட வேண்டி வரலாம், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

வளவன்

# வடக்கில் சிவில் நிர்வாகத்துக்குள் இராணுவத்தலையீடு அதிகரிப்பு

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

வடக்கில் தற்போது சிவில் நிர்வாகம் இல்லை. அனைத்தும் இராணுவமயமாக்கப்பட்டுள்ளது. இது இல்லாது ஒழிக்கப்பட வேண்டும் என ஜே.வி.பி.யின் பிரசார செயலாளரும் எம்.பியுமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனமானது தெற்கு சிங்கள இனவாதி களுக்கு சாதகமானதன்மையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் இராணுவத்தினரை முழுமையாக முகாம்களுக்குள் முடக்க முடியாது. ஆனால் சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தின் தலையீடு அதிகரித்துள்ளது. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தின் தலையீட்டை இல்லாது செய்து மக்களுக்கு சுதந்திரத்தை வழங்க வேண்டும்.

இராணுவம் ஆளும் தரப்பு வேட்பாளர்களுக்கு ஆதரவாக செயற்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரின் கவனத்துக்கு முன்வைப்போம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் பிரிவினைவாதத்தைஊக்குவிப்பதாக உள்ளது. இதனைமுழுமையாக நிராகரிக்கின்றோம்.

கூட்டமைப்பு இவ் விஞ்ஞாபனத்தின் மூலம் அரசில் உள்ள சிங்கள இனவாதிகளுக்கு சாதகமான களத்தை அமைத்துக் கொடுத்துள்ளது. இதன் மூலம் நாட்டுக்குள் மீண்டும் இனவாதம் தலைதூக்கும் ஆபத்து தலைதூக்கியுள்ளது.(அ-2)

## தொழிலாளர் கொள்கை அடுத்தவருடம் அறிமுகம்

தொழிலாளர்கள் தொடர்பில் புதிய கொள்கைகளை அடுத்த வருடம் முதல் அறிமுகப்படுத்தவுள்ளதாக தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு தெரிவித்துள்ளது. தொழிலாளர்களது பாதுகாப்பு தொடர்பில் இதன் போது கவனம் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள பாதுகாப்பு சட்டம் தொழிலாளர்களுக்கு உரிய பலனை வழங்காமையின் காரணமாக புதிய கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அவ் அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய கொள்கைகளை அறிமுகப்படுத்துவது தொடர்பான முதற்கட்ட பேச்சுவார்த்தை கள் நிறைவடைந்துள்ளன. வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் தொடர்பில் புதிய கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)

வடமாகாண சபைத் தேர்தல் யாழ். மாவட்டம்
விவேகம், துணிவு, நேர்மை என்றும் உங்களுடன்
என்னைத் தெரிந்தவர்கள்
உங்களுக்கு தெரிந்தவர்களிடம்
எனக்காக வாக்களிக்கச் சொல்லுங்கள்.
பாலா
கணேசபிள்ளை பாலச்சந்திரன்
(ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழு உறுப்பினர், காரைநகர் பிரதேசசபை உறுப்பினர், அகில இலங்கை சமாதான நீதவான்)
வெற்றிபெற வையுங்கள்
X 11
(E-036)



வடமாகாண சபைத் தேர்தல்- 2013
ஜனநாயகக் கட்சி
முல்லைத்தீவு மாவட்டம்
இலங்கையில் வடமாகாணத்திற்கோர் இதயம் உதயமாகிறது.
ஜனநாயகக் கட்சி
Democratic Party
"தேர்தலுக்காக சேவையல்ல சேவைக்காகத் தேர்தல்"
X
2
முதன்மை வேட்பாளர்
இ.மு. சுறைஸ்
(முகாமைத்துவ உதவியாளர்)
பணிப்பாளர்- அறிவிருட்ஷம்
(துரித கல்வி மேம்பாடு)
(EC-4892)
உங்கள் தெரிவு உரிமைப் பகிர்வு






வடமாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்.மாவட்டம்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
அழிந்து போன எமது பிரதேசங்களை
மீளவும் கட்டியெழுப்பிட
இளைஞர், யுவதிகளின்
வேலைவாய்ப்பிற்கு வழி சமைத்திட
உங்கள் தெரிவு...
X
11
(EC-4991)
சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினரும்
தென்மராட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும்
குமாரு சர்வானந்தன் (சர்வா)



வடமாகாண சபைத் தேர்தல் 2013
முல்லைத்தீவு மாவட்டம்
வல்லிபுரம் கமலேஸ்வரன்
(தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி முல்லை மாவட்டம்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
உண்மைக்கு குரல் கொடுத்து
உரிமைகளை வென்றெடுப்போம்
தன்மானம் உள்ள தமிழனாய்
தலை நிமிர்ந்து நின்றிடுவோம்
அதற்காய்
உங்கள் தெரிவு.....
இலங்கைத் தமிழரசுக் கட்சி X 7



வடமாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ். மாவட்டம்
மாறினால் மாறட்டும்
இல்லையேல் மாற்றுவோம்
தீமைகள் யாவையும்
கூண்டிலே ஏற்றுவோம்...!
இம்மானுவல் ஆனல்ட்
(இலங்கை தமிழரசுக் கட்சி யாழ். தொகுதி கிளைச் செயலாளர், முன்னாள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், விளையாட்டுப் பேரவைத் தலைவரும் அகில இலங்கை சமாதான நீதிவானும்)
பொங்குதமிழ் நாயகன்
வெற்றி பெற வாழ்த்துகின்றோம்...
-நண்பர்கள்
X 5
(E-059)
தமிழ் அரசுக் கட்சி (தமிழ் தேசியக் கூட்டமைப்பு)





வடக்கு மாகாணசபைத் தேர்தல் 2013
யாழ்.மாவட்டம்
3
தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை பெற்று வாழ
அபிவிருத்தி நோக்கி நகர நலிவுற்றோர் நலன்பெற,
ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரல் இலங்கைத்
தமிழரசுக் கட்சி கோப்பாய் கிளை செயலாளர்
அரியகுட்டி பரஞ்சோதிக்கு வாக்களிப்போம்
அரியகுட்டி பரஞ்சோதி
(மாநகரசபை உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி X 3
(E-035)

# காணிப்பிரச்சினை தெற்கிலும் உண்டு

## ஜனாதிபதி தெரிவிப்பு

காணிப் பிரச்சினைகளை வடக்குக்கு மட்டும் வரையறுத்துவிட முடியாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தெற்கு மக்களும் காணிப் பிரச்சினைகளினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேவையானவர்களுக்கு காணிகளையும் வீடுகளையும் வழங்கும் பொறிமுறைமை ஒன்றை அரசாங்கம் உருவாக்கி வருகிறது.

வடக்கில் உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தி அதன் மூலம் பிரதேச மக்களின் வர்த்தக வாய்ப்புகளை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்ட முன்னாள் தமிழீழ விடுதலைப்புலி போராளிகளுக்கு தொழில்வாய்ப்புஅளிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபை அரசாங்கத்துடன் இணைந்து செயற்படாவிட்டால் அபிவிருத்திப் பணிகள் பாதிக்கப்படும். நாட்டில் மீண்டும் பிரிவினை வாதம் ஏற்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
முல்லைத்தீவு மாவட்டம்
தமிழ் தேசிய கூட்டமைப்பு
முல்லை மண்ணில் இருந்து முதல் தெரிவு



8
(EC/4890)
வைத்தியகலாநிதி
சி.சிவமோகன்
அமோக வாக்குகளால் வெற்றி பெறச் செய்வோம்
X 8
வீட்டுக்கு வாக்களித்து தேசத்தை காத்திடுவோம்



வடக்கு மாகாணசபை தேர்தல் 2013
யாழ்.மாவட்டம்
சுதந்திரம் எமது பிறப்புரிமை!
சுயாட்சி எமது கோரிக்கை!!



தமிழ் இனப் படுகொலைகளுக்காக வெளிப்படையான சர்வதேச நீதி விசாரணை தேவை என முக்கிய தமிழர் எம்.கே.சிவாஜிலிங்கம் பகிரங்கமாக வலியுறுத்தும் ஒரே ஆளாக இருப்பதாக அமெரிக்கத் தூதுவர் தனது நாட்டின் வோஷிங்டன் நகருக்கு 15.01.2010 இல் அனுப்பி வைத்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்ததாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

X

எம்.கே.சிவாஜிலிங்கம் 9
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
(தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்)

| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | | X |
|---|---|---|

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையிலான ஐந்து கட்சிகளின் கூட்டணியான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச்செய்வோம்.
தேசியம் தாயகம் சுயநிர்ணய உரிமை



வட மாகாண சபைத் தேர்தல் -2013
கிளிநொச்சி மாவட்டம்



அரசியலில் அறிவும்
ஆழ்ந்த அனுபவமும்
சட்டத்துறையில் புலமையும்
எவர்க்கும் அஞ்சாத
மனத்துணிவும் கொண்ட
எங்கள் மூத்த அரசியல் தலைவர்
வீ. ஆனந்த சங்கரிக்கே
எங்கள் வாக்கு
X 2
கிளிநொச்சி தமிழர் மேம்பாட்டு அமையம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு

வடமாகாண சபைத் தேர்தல்-2013
யாழ்ப்பாண மாவட்டம்



பா. கஜதீபன் (ஆசிரியர்)
தலைவர், இளைஞர் அணி,
தமிழரசுக் கட்சி.

17

எமது நிலம் எமக்கு வேண்டும்
எமது கடல் நமக்கு வேண்டும்
எம்மை நாமே ஆழ்வதற்கு
எங்கள் வீட்டுக்கு நாம் செல்ல
ஆதரிப்போம் தமிழரசை...

(E/054)

இலங்கைத் தமிழரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

X 17

ஆதரவாளர்கள்
தமிழரசுக் கட்சி
காங்கேசன்துறை தொகுதி

வடமாகாண சபைத் தேர்தல் - 2013
முல்லைத்தீவு மாவட்டம்





யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர்
**க.ஜெனமேஜெயந்** அவர்களின் தந்தையும் முல்லை மண்ணின்
தமிழ்த் தேசிய உணர்வாளனும் மக்களிற்கு சேவையாற்றும் தன்னிகரில்லாத் தலைவன்
**திரு.வீ.கனகசுந்தரசுவாமி** (ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)
அவர்களிற்கு உங்கள் வாக்குகளை அளியுங்கள். - **பல்கலை தோழர்கள்**

இலங்கை தமிழ் அரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

X 4

(Ec-4884)

## களுவாஞ்சிக்குடியில் கஞ்சா செடிகள் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுதாவளை பகுதியிலுள்ள தோட்டத்தில் இருந்து பெருமளவான கஞ்சா செடிகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் இந்தக் கஞ்சா தோட்டத்தை முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது அங்கு பயிரிடப்பட்டிருந்த சுமார் ஐந்து அடி உயரம் கொண்ட 30 இற்கும் மேற்பட்ட கஞ்சா செடிகளை மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மரவள்ளித் தோட்டத்துக்கு இடையே இந்த கஞ்சா தோட்டம் செய்கை பண்ணப்பட்டுள்ள நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் பரிசோதகர் அபூபக்கர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்டவரையும் கஞ்சா செடிகளையும் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

## கென்யா எதிர்க்கட்சி தலைவரும் வருகை

மூன்று மாகாண சபைகளின் தேர்தல்களை கண்காணிப்பதற்காக கென்யா எதிர்க்கட்சி தலைவர் கெ லோன்ஸோ முஸ்யோகாகேவும் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

அவர் தலைமையில் கென்யாவிலிருந்து வருகை தந்துள்ள மூன்று பிரதிநிதிகளும் தற்பொழுது கொழும்பில் தங்கியுள்ளனர். கெலோன்ஸோ முஸ்யோகாகே யாழ்ப்பாணத்துக்கு விரைவில் வரவுள்ளார்.

இரண்டு வாரங்கள் இலங்கையில் தங்கியிருக்கும் அவர் தன்னுடைய அறிக்கையை பொதுநலவாய அமையத்தின் செயலாளர் காரியாலயத்தில் கையளிப்பார். (அ-2)

வட மாகாண சபைத் தேர்தல் -2013
யாழ். மாவட்டம்

இளைஞர் அமைப்பு
சுயேட்சைக்குழு - 01




அன்ரனி
( தலைவர் )
(முதன்மை வேட்பாளர்)


X 2

(E-038)

புறப்படுவோம் இளைஞர் அணியுடன்
எங்கும் செல்வோம் பந்தில் வெல்வோம்.
- எமது அணியை வெல்லச் செய்யுங்கள் -

இத்தேர்தலில் வாக்களிக்கும் நீங்கள்
ஒவ்வொருவரும் போராளியே!



எங்கள் உரிமை,
உங்கள் தெரிவு

X 10

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

க.வி.விக்னேஸ்வரன்
(ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர்)
முதன்மை வேட்பாளர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(EC/4900)

# முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஜனாதிபதி செயற்படமாட்டார்

## அமைச்சர் பௌஸி நம்பிக்கை

நாட்டில் பல பள்ளிவாசல்களைத் திறந்து வைக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஒருபோதும் செயற்படமாட்டார் என்பது உறுதி என சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரிவித்துள்ளார்.

சிலாபத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் பௌஸி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பள்ளிவாசல்கள் உடைக்கப்படுவதாக வதந்திகளை பரப்பி முஸ்லிம் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த முனையும் சக்திகளிலிருந்து மக்கள் தம்மைப் பாதுகாப்பது அவசியம் எனவும் தெரிவித்தார்.

ஹஜ் செல்லும் ஹஜ்ஜாஜிகளில் முதற் குழுவினர் ஹஜ் பயணம் மேற்கொள்கின்றனர். முதல் தடவையாக எமக்கு விமான நிலையத்தில் தொழுகை நடத்த தனி அறை ஒதுக்கப்பட்டுள்ளது.

அங்கு நாம் தொழுகையில் ஈடுபட்டோம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சகல மதங்களையும் மதிப்பவர். கௌரவிப்பவர். சகல மக்களின் அபிமானத்தையும் பெற்றவர். முஸ்லிம் பள்ளிகளை திறந்து வைத்த பெருமைக்குரிய ஜனாதிபதி. தம்புள்ளை பள்ளிவாசலை உடைக்கப் போவதாக வதந்திகள் பரப்பப்படுகின்றன. நான் இவ்விடயத்தில் நேரடியாக தலையிட்டு சம்பந்தப்பட்ட வர்களிடம் கலந்துரையாடினேன். இவ்வாறு ஒரு முடிவு எடுக்கப்பட வில்லை என்பது தெரிய வந்தது. முஸ் லிம் இத்தகைய வத ந்திகளில் ஏமாறக் கூடாது.

ஐந்து வேளை வானொலியில் பாங்கு சொல்வதற்கு ஜனாதிபதியே வழி வகுத்தவர். அவர் முஸ்லிம்களின் நண்பர். முஸ்லிம் மக்களை நேசிப்பவர்.

அத்தகையவர் முஸ்லிம்களுக்கு எதிராக எதுவும் செய்ய மாட்டார். பள்ளிகள் தொடர்பில் ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் அரசாங்கம் அதற்கு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும் என்றார். (அ-2)

# இப்படியும் நடக்கிறது ஹெரோயின் கடத்தல்

ஏலக்காய்க்குள் மிகவும் சூட்சுமமான முறையில் ஹெரோயின் போதைப்பொருளை மறைத்துவைத்து கொழும்பு மகஸின் சிறைசாலைக்குள் எடுத்துச்சென்ற நபர் கைது செய் யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஹெரோயின் போதைப் பொருள் அடங்கிய ஏலக்காயை சீனிச் சம்பலுக்குள் கலந்து வைத்திருந்ததாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்ரரத்ன பல்லேகம குறிப்பிட்டுள்ளார்.

இந்நபர் மீது எழுந்த சந்தேகத்தைத் தொடர்ந்து சிறைச்சாலை பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சோதனையின் போது இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கொழும்பு புதிய சிறைச்சாலைக்குள் கோழி இறைச்சியின் எலும்புகளில் ஹெரோயின் போதைப்பொருளை மறைத்துச் சென்ற நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பால் பக்கற்றுக்குள் பாலை அகற்றி அதனுள் மதுபானத்தை எடுத்துச் சென்ற ஒருவர் கடந்த வாரம் கைது செய்யப் பட்டதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்ரரத்ன பல்லேகம மேலும் கூறினார். (அ-2)


# சீரடி சாயி மந்திர் சப்பைரத பவனி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சீரடி சாயி மந்திரினால் நடத்தப்படும் ஸ்ரீ சீரடி சாயி பாபாவின் பூச்சப்பை ரதபவனி நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி வசந்த மண்டப பூசையை தொடர்ந்து பிற்பகல் 6.30 மணிக்கு பூச்சப்பைரத பவனி இடம்பெறவுள்ளது.

பவனி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி நாவலர் வீதி, கச்சேரி வீதி,றக்கா வீதி, கோவில் வீதி, நாவலர் வீதி ஊடாக சென்று மீண்டும் ஆலயத்தை வந்தடையவுள்ளது.

ஸ்ரீ சீரடி சாயி பாபாவின் பூச்சப்பைரத பவனி இடம்பெறுவது இலங்கையில் இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)


வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்

இனக் குரோதமும்
உணர்ச்சி வசனங்களும்
எம்மிடம் இல்லை.
இனப்பிரச்சினை தீர்க்கும்
நடைமுறை வழி எம்மிடம் உண்டு
5
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்
(பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர்) (E/060)
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
X 5

வட மாகாணசபை தேர்தல் 2013
யாழ்.மாவட்டம்

இருப்பதைக் காப்போம்!
இழந்ததை மீட்போம்!!
இலங்கை தமிழரசுக் கட்சி
X
13
(E/073)
கே.சயந்தன்
(சட்டத்தரணி)
சுயாட்சி வெல்ல வாக்களிப்போம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வட மாகாணசபைத் தேர்தல் 2013

கடந்த 30வருடங்களாக உரிமைப்
போராட்டத்திற்குப் பங்களித்து
தொடர்ந்தும் பணியாற்றிவரும்
மக்களின் அன்பிற்குரிய வேட்பாளர்கள்
(E-078)


சூழலியலாளர்
பொ.ஐங்கரநேசன்
Msc,PGDJMC

அரசியல் சிந்தனையாளர்
கலாநிதி க.சர்வேஸ்வரன்
B.A Hons (Pol Sc), M.A., Ph.D விரிவுரையாளர்

தலைவர், வ.மா.க.தொ.கூ.ச
ந.வி.சுப்பிரமணியம்
X 24 16
இலங்கைத் தமிழரசுக் கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

# தனியார் நிறுவனங்கள் வாக்களிப்பதற்கான விடுமுறையை உரியவாறு வழங்க வேண்டும்

## தொழிலமைச்சர் காமினி லொக்குகே கோரிக்கை



**(கொழும்பு)**

**மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாண சபை தேர்தல்களில் வாக்களிப்போருக்கான விடுமுறைகளை உரிய முறையில் பெற்றுக் கொடுக்காமை சட்டப்படி தவறாகுமென தொழிலமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.**

வாக்காளர் தொழில் புரியுமிடத்திலிருந்து வாக்களிப்பு நிலையத்துக்குள்ள தூரத்தை அடிப்படையாகக் கொண்டு அரச மற்றும் தனியார் தொழில் தருநனர்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அவ்வாறு வாக்களிப்போரின் உரிமையை பெற்றுக் கொடுக்க தவறும் தொழில் தருநர்களுக்கு எதிராக தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் தேர்தல்கள் சட்ட விதிமுறைகளுக்கமைய வழக்குத் தாக்கல் செய்ய முடியுமெனவும் அமைச்சர் கூறினார்.

வாக்களர்களின் வாக்குரிமையைக் கருத்திற் கொண்டு சம்பளத்துடன்கூடியதானவிசேடவிடுமுறையை அரச மற்றும் தனியார் தொழில் தருநர்கள் வழங்க முன்வர வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஏற்கனவே வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களை அடிப்படையாகக் கொண்டே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வாக்களிப்பதற்கான விடுமுறை கோரி எழுத்து மூலம் விண்ணப்பம் செய்கின்ற சகல ஊழியர்களுக்கும் தூரத்தின் அடிப்படையில் விடுமுறை வழங்க வேண்டும்.

அவ்வாறுவழங்கதவறும்தொழில் தருநர்கள், சட்டத்தின் முன்னால் குற்றவாளியாகவே கருத்தப்படுவர். இவர்கள் நீதவானால் 500 ரூபாவிற்கு மேற்படாத தண்டப் பணம் அல்லது ஒரு மாத காலத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது அவை இரண்டும் விதித்து தீர்ப்பளிக்கப்படுவரெனவும் தேர்தல்கள் சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று மாகாண சபைகளிலும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள வாக்காளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்திற்கான தூர அடிப்படையில் அங்கு செல்லவும் அங்கிருந்து வரவுமுள்ள தூரத்தைக் கொண்டு தொழில் தருநர்கள் விடுமுறையைத் தீர்மானிக்க வேண்டும்.

இந்த விடுமுறை 4 மணித்தியாலயங்களுக்கு குறையாது இருப்பதுடன், சம்பள இழப்பை ஏற்படுத்தாத விசேட விடுமுறையொன்றாக கருதப்பட வேண்டுமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இருப்பினும் கொழும்பில் தனியார் நிறுவனங்கள், கடைகள் மற்றும் ஹோட்டல்களில் பணிபுரிந்து வரும் வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் தமக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வருவதற்கான நேரத்தைதங்களதுதொழில் தருநர்கள் குறைத்து வழங்கியிருப்பதாக குற்றம் சுமத்துகின்றனர்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கமும் தேர்தல் திணைக்களமும் இது குறித்து அறிவிப்பு விடுத்துள்ள போதிலும் சில தனியார் நிறுவனங்களும் ஹோட்டல்களும் அதற்கமைய விடுமுறை வழங்க மறுத்துள்ளன. இது மனித உரிமை மீறலென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

## தேர்தல் சட்ட விதிகளை மீறிய 125 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணசபைகளைச் சேர்ந்த 125 பேர் இது வரையில் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரையிலும் 142 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் கடுமையாக தேர் தல் சட்டவிதிகள் மீறிய 125 பேரே கைது செய்யப்பட்டிருப் பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, மத்திய மாகாணத்திலிருந்தே ஆகக் கூடுதலாக 61 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவற்றைத் தவிர வடக்கில் 48 முறைப்பாடுகளும் வடமேல் மாகாணத்தில் 33 முறைப்பாடு களும் பதிவாகியிருப்பதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-2)


வடமாகாண சபைத் தேர்தல் - 2013


கிளிநொச்சி மாவட்டம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

( தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு )



வலி தந்தாரை தோற்கடிப்போம்
நம் விதி வெல்ல வாக்களிப்போம்.




1

**பசுபதி அரியரத்தினம்**
முன்னாள் மேலதிக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்.



5

**தம்பிராசா குருகுலராசா**
முன்னாள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்.



7

**சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை**
செயலாளர், இலங்கை தமிழரசுக் கட்சி கிளிநொச்சி மாவட்டம், முன்னாள் கிளிநொச்சி, முல்லைத்தீவு கிராம சேவையாளர்.

(EC/4889)

★ ஏந்தவொருஅரசியற்தீர்வும், தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதையும், அவர்கள் தங்கள் அரசியல் இருப்பைத் தீர்மானிக்கும் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதையும் ஏற்றுக்கொண்டு, அத்தீர்வானது ஒருங்கிணைந்த வடக்கு கிழக்குத் தாயகத்தை மையப்படுத்தியே அமையமுடியுமென்றும் வலியுறுத்துகின்றோம்.

★ பிறழ்வுகள் பலவுடைய 13 ஆவது திருத்தச் சட்டமோ, ஒற்றையாட்சிக்குட்பட்ட அரசியலமைப்போ தமிழ் மக்களின் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் அரசியற்தீர்வுக்கு இட்டுச்செல்ல முடியாதவை.

★ இலங்கைத்தீவில் வாழும் கொடிய இனப்படுகொலைக்கு (Genocide) உட்படுத்தப்பட்டுள்ளார்கள் என்று நாம் குற்றஞ்சாட்டுகின்றோம். போரிற்குப் பின்னரும் திட்டமிட்ட குடியேற்றம், காணி அபகரிப்பு என்பதான கட்டமைப்புகள் சார்ந்த இனச்சுத்திகரிப்புத் தொடர்கிறது. போரின்போதும், கடந்த 30 வருடங்களாகவும் தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், இனப்படுகொலை, மனித குலத்திற்கெதிரான குற்றங்கள் தொடர்பாக ஐநா அமைப்பினூடாக சுயாதீன அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று திடமாக வலியுறுத்துகின்றோம்.

**கிளிநொச்சி மாவட்ட மக்கள்.**

# இந்தியாவை அச்சுறுத்தும் சீன- இலங்கை உறவு ...?



நாளுக்கு நாள், சீன- இலங்கை உறவு வலுப்படுவது, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையப்போகிறது: சீனாவின் அமைச்சர் அல்லது உயர் அதிகாரிகள் அடிக்கடி இலங்கைக்கு வருகை தருகின்றனர். இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையே பல உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் மாதாமாதம் கையெழுத்தாகிக் கொண்டிருக்கின்றன. இதன் விளைவாக இந்துமகா சமுத்திரம், வங்கக் கடல், கச்சதீவு வரை சீனாவின் ஆதிக்கம் பரவிவிட்டிருக்கிறது.

பாகிஸ்தானுடன் சீனா பல உடன்பாடுகள் கண்டு, குஜராத்வரை அரபிக் கடலில் சீனாவின் ஆதிக்கமும் ஆளுமையும் ஏற்பட்டுவிட்டது. அதுமட்டுமா? தரை வழியாக சீனாவிலிருந்து பாகிஸ்தானின் தென் பகுதியான அரபிக் கடல்வரை நெடுஞ்சாலைகள் அமைத்து, தனது மேற்குப் பகுதிக்கு கடல் வணிகத் தொடர்பு ஏற்படுத்தும் முயற்சியிலும் சீனா இறங்கியுள்ளது.

பண்டித நேரு, இராணுவத் தளவாடம் சம்பந்தமான ஆலைகளை தென் மாநிலங்களில் அமைத்தார். ஏனெனில், வடகிழக்கு, வடமேற்கு, ஆகியவை இந்தியாவின் பாதுகாப்பற்ற பகுதிகளாகும் நிலை. இந்தியாவின் தென்பகுதிகள் குறிப்பாக தமிழகம் பாதுகாப்பானது எனக் கருதியதாலேதான் இராணுவம் தொடர்பான தொழிற்சாலைகள் அனைத்துமே தென்னகத்தில் அமைக்கப்பட்டன. இதை மனதில் கொண்டுதான் சீனா இலங்கையைத் தனது தளமாக அமைக்கிறது.

இலங்கையிலிருந்து தென்னகத்தில் உள்ள இராணுவத் தளவாடத் தொழிற்சாலைகளையும், விண்வெளி சோதனை நிலையங்களையும், அணு உலைகளையும் தாக்கவோ தகர்க்கவோ முடியும் என்பதே கூட சீனாவுக்கு இலங்கை மீதான கரிசனத்திற்கு காரணமாக இருக்கலாம். சில வாரங்களுக்கு முன்னதாக, சீனாவின் உதவி அரச பாதுகாப்பு அமைச்சர் சோயு குயிங் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். கடந்த ஆண்டு சீனாவின் தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜெனரல் லியாங் குவாங்லி இலங்கைக்கு மேற்கொண்டிருந்த பயணத்தை அடுத்து, இலங்கைக்கு வந்த சீனாவின் உயர்நிலைப் பாதுகாப்பு அதிகாரி இவர்தான். சீனாவின் உதவி, அரச பாதுகாப்பு அமைச்சர் சோயு குய்ங்கிற்கு இலங்கை அரசாங்கம் அதிகளவு முக்கியத்துவம் கொடுத்திருந்தபோது, அவர் யார் என்பதை ஊடகங்களால் சரியாக அடையாளங் காண முடியவில்லை.

இவர் முதலில் திருகோணமலைக்கு சென்று இரண்டு நாட்கள் தங்கியிருந்தார். அங்கு இலங்கை கடற்படையின் கிழக்குத் தலைமையகம் அமைந்துள்ள கப்பல் தளத் தில் அதிகாரிகளுடன் ஆலோசனை யில் ஈடுபட்டதுடன் கடற்படை அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டார். திருகோணமலைத் துறைமுகத்தை படகில் பயணித்து முழுதாக ஆய்வு செய்த அவர், சீனன்குடா விமானப் படைத் தளத்தையும் பார்வையிட்டு, விமானப்படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார். சோயு குய்ங்கின் இந்தப் பயணம், சீனன்குடாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான புதிய முடிச்சுகளைப் போடுவதற்கான பிள்ளையார் சுழியாக அமையுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

வான் புலிகளை எதிர்கொள்ள சீனா கொடுத்த முப்பரிமாண ரேடர் இங்குதான் நிறுவப்பட்டுள்ளது. போரின் இறுதிக்கட்டத்தில் விடுதலைப் புலிகள் தப்பிச் செல்வதைத் தடுப்பதற்கு இலங்கை விமானப்படையிடம் உள்ள - சீனாவில் தயாரிக்கப்பட்ட -எஃப் -7 ரக ஜெட் போர்விமானங்கள் சீனன் குடாவில்தான் நிலை கொண்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. திருகோணமலை கடற்படைத் தளத்தில் நிறுத்தி வைக்கபபட்டுள்ள விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் பயன்படுத்திய கரும்புலித்தாக்குதல் படகையும் சீன உதவி அமைச்சர் சோயு குய்ங் பார்வையிட்டார். அதன் பின்னர் விமானத்தில் பலாலிக்குச் சென்ற சீன உதவி அமைச்சருக்கு அங்கும் நல்ல வரவேற்பு அளிக்கப்பட்டது. யாழ்ப்பாணப்படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவுடன் சோயு குயிங், அவருடன் வந்த ஆறு சீன அதிகாரிகளும் பேச்சு நடத்தினர். பின்னர் விமானப்படை ஹெலிகொப்டரில் யாழ்ப்பாணம் கோட்டைக்குச் சென்று பார்வையிட்ட அவர்கள் கொழும்பு திரும்பி, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவைச் சந்தித்துப் பேசினர். சீனாவின் பாதுகாப்பு கட்டமைப்பை விளங்கிக் கொள்ளாமல் இந்தப் பயணத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவது கடினம்.

முதலாவது, தேசிய பாதுகப்பு அமைச்சகம். இதன் கீழ்தான் செஞ்சேனை எனப்படும் சீனாவின் முப்படைகளும் உள்ளன. இரண்டாவது, அரச பாதுகாப்பு அமைச்சகம். இதுவே, சீனாவின் முதன்மையான புலனாய்வு அமைப்பு. இதன் பிரதானமான கடமை வெளியகப் புலனாய்வுப் பணிகளை மேற்கொள்வதாகும். இந்தியாவின் ரோ எனப்படும் ஆய்வு மற்றும் பகுப்பாய்வு அலகு, அமெரிக்காவின் சி.ஐ.ஏ எனப்படும் மத்திய புலனாய்வுப் பிரிவு போன்றவற்றுக்கு இணையாக செயல்படுகிறது. சுருக்கமாக இது எம்.எஸ்.எஸ் என அழைக்கப்படுகிறது.

மூன்றாவது, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சகம் இது சீனாவின் காவல் துறைக்குப் பொறுப்பாக உள்ளது. உள்நாட்டு பாதுகாப்பு, சட்டம்- ஒழுங்கைப் பேணுவது இதன் பொறுப்பு. சீனாவின் வலுவான அமைச்சகம் ஒன்றின் உதவி அமைச்சரே இலங்கைக்கு வந்து சென்றுள்ள போதிலும் அதற்கு அவ்வளவாக ஊடக முக்கியத்துவம் கொடுக்கப் படவில்லை. அதற்கும் காரணம் உள்ளது. அடக்கி வாசிக்கப்பட்டதால், சீனாவின் அரச பாதுகாப்பு உதவி அமைச்சரின் பயணத்தை மிகச் சாதாரணமாக எடுத்துக்கொண்டவர்களே அதிகம் பேர்.

சீனாவைப் பொறுத்தவரையில், இந்தியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளையும் தனக்குச் சவாலாகக் கருதுகின்றது. இந்த மூன்று நாடுகளும் இலங்கையுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருப்பதும் சீனா அவற்றைவிட அதிக தொடர்பைக் கொண்டிருப்பதும் முக்கியமான விடயங்கள். தென்சீனக் கடலிலும் பசுபிக் பிராந்தியத்திலும் சர்ச்சைக்குரிய தீவுகள் விவகாரத்தில் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் ஒரு பனிப்போரே நடந்துகொண்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது, அண்மையில் இலங்கையுடன் ஜப்பான் செய்துகொண்ட கடல்சார் உடன்படிக்கை, இந்தியப் பெருங்கடலில் சீனாவின் தலையீட்டைக் குறைப்பதை அடிப்படையாகக் கொண்டது. அந்த உடன்பாடு செய்துகொள்ளப்பட்டு ஒரு மாதம் கூட ஆகாத நிலையில் தான், சீன அரச பாதுகாப்பு உதவி அமைச்சரின் பயணம் இடம்பெற்றிருந்தது. இந்தியப்பெருங்கடலில் இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஆதிக்கத்தை உடைக்க, சீனா பெரும் வியூகத்தை வகுத்து காய்களை நகர்த்திவருகிறது. சீனாவின் முதல் விமானந்தாங்கி கப்பல்கூட இந்தியப் பெருங்கடலில்தான் நிலை கொள்ளப் போகிறது. இவ்வாறு இந்தியப் பெருங்கடலில் அதிகரித்து வரும் சீனத் தலையீட்டை முறியடிக்க இந்தியாவும் தன் பங்கிற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறது.

சீனாவின் நீர்மூழ்கிகளை எதிர்கொள்ளும் வகையில் விசாகப் பட்டினத்திற்கு அருகே நிலத்திற்கடியிலான நீர்மூழ்கித் தளம் ஒன்றை அமைக்கும் பணியை இந்தியா தீவிரப்படுத்தி உள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியாகின. இத்தகைய சூழலில்தான் சீன உதவி அமைச்சரின் பயணம் இடம்பெற்றது. இந்தியாவை உளவு பார்ப்பதற்கான ஒரு தளமாக இலங்கையை சீனா பயன்படுத்தி வருகிறது. விசாகப்பட்டினம் கிழக்கு கடற்படைத் தலைமையகமும் கிழக்கு கடலோரப் பகுதிகளிலுள்ள ரொக்கெட் ஏவு தளங்களும் சீனாவின் கவனத்துக்குரிய முக்கிய இலக்குகளாகும். இந்தியாவின் நீர்மூழ்கிக் கப்பல்களின் பிரதான தளமாக விசாகப்பட்டினமே உள்ளது. இங்கிருந்து இந்தியக் கடற்படைக்கான ஏவுகணைகள் பரிசோதிக்கப்படுகின்றன.

அதேவேளை ஒரிஸ்ஸாவின் வீலர்தீவு, சண்டிப்பூர் ஆகியன இந்தியாவின் முக்கியமான ஏவுகணைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் ஏவுதளங்களாக உள்ளன. இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி ஏவுகணைகள் அனைத்தும் ஆந்திரத் தின் சிறீஹரிகோத்தாவில் இருந்தே ஏவப்படுகின்றன. இவையெல்லாம் சீனாவால் உன்னிப்பாகக் கண் காணிக்கப்படும் இலக்குகளாகும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அந்தமான் தீவுகளுக்கு அருகே மீன்பிடிப்படகு போன்று வடிவமைக்கப்பட்ட சீனாவின் உளவுக் கப்பல் ஒன்றை இந்தியக் கடற்படை துரத்திச் சென்றபோது, அது கொழும்புத் துறைமுகத்தில் அடைக்கலம் தேடிக் கொண்டதாக செய்திகள் வெளியானது. கடலின் தன்மையையும் இந்தியாவின் கிழக்குக் கடற்பகுதியிலுள்ள ஏவுகணைத் தளங்களையும் கண்காணிக்கும் பணியில் அந்தக் கப்பல் ஈடுபட்டதாகவே கருதப்பட்டது. இந்தியாவை உளவு பார்க்க இலங்கையை மட்டுமன்றி நேபாளத்தையும் கூட சீனா பயன்படுத்திக் கொள்கிறது.

நேபாள எல்லையில் ப்தினொரு புலனாய்வு தகவல் நிலையங்களை சீனா அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த நடவடிக்கைளுக்கெல்லாம் பொறுப்பாக இருப்பது சீனாவின் அரச பாதுகாப்பு அமைச்சுதான். இந்தியாவின் பாதுகாப்பு இரகசியங்களை இந்தப் பிரிவு பல்வேறு வழிகளில் பெற்றுக் கொள்கிறது. மரபு சார்ந்த வழிமுறைகளை மட்டுமன்றி இணையவழி சைபர் தாக்குதல்கள் மூலமும் இந்தியாவின் முக்கிய பாதுகாப்பு கட்டமைப்புகளினுள் ஊடுருவியும் பெருமளவு இரகசியங்களையும் சீன உளவுப் பிரிவு களவாடியுள்ளது.

அண்மையில் இஸ்ரோ எனப்படும் இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி பிரிவு, மற்றும் ஏவுகணைகளை வடிவமைக்கும பாதுகாப்பு ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றின் இரகசியங்களை சீனா திருடியுள்ளதாக அண்மையில் இந்தியா குற்றஞ் சாட்டியது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவுக்கும் கூட சீனாவின் இத்தகைய நெருக்கடிகள் இருக்கின்றன. இவை அனைத்துமே சீனாவின் அரச பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் கிளை அமைப்புகளால் தான் வழி நடத்தப்படுகின்றன. இத்தகைய வலுவான அமைப்பு ஒன்றின் இரண்டாவது பொறுப்பு வாய்ந்த அதிகாரியின் இலங்கைப் பயணத்தை இந்தியாவோ, அமெரிக்காவோ, ஏன் ஜப்பானோ கூட இலகுவாக எடுத்துக் கொள்ளக் முடியாது.



கே.எஸ்.இராதாகிருஷ்ணன்

# வட மாகாணசபைத் தேர்தல் - 2013
## முல்லைத்தீவு மாவட்டம்

### நா. ரட்ணராஜா
### (ரட்ணா/பெத்தையா)

X 6



முன்னாள் முல்லை மாவட்ட
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்
"நியாப்" திட்ட உதவியாளர்,
"என்றிப்" மற்றும் மீள் எழுச்சித்திட்ட
பிரதித் திட்டப்பணிப்பாளர்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

(PU4887)

# வட மாகாணசபைத் தேர்தல் - 2013
## கிளிநொச்சி மாவட்டம்

### அ.விஜயகிருஷ்ணன்
### (விஜயன்)

X 2



முன்னாள்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்
"நியாப்", வடக்கின் துரித மீட்சித்திட்ட
மற்றும் மீள் எழுச்சித்திட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

# தொடர்ந்தும் தாக்கப்பட்டால் ஆயுதம் ஏந்திப் போராடுவோம்

இலங்கை கடற்படையினரால், தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பில் மத்திய அரசு பாதுகாப்பு வழங்க வேண்டும். பாதுகாப்பு வழங்கத் தவறின் ஆயுதம் ஏந்திப் போராடுவோம் என்று தமிழக மீனவர் சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இந்திய மீனவர்கள், தொடர்ந்து இலங்கை இராணுவத்தினால் படுகொலை செய்யப்படுகின்றனர். இதுதொடர்பில் மத்திய அரசு இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

ஆகையால், மத்திய அரசைக் கண்டித்து எதிர்வரும் 20 ஆம் திகதி பல்வேறு மீனவ இயக்கங்கள் இணைந்து சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் கண்டன போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

மேலும், இலங்கை இராணுவத்தினரிடம் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள மத்திய அரசு வழி வகை செய்ய வேண்டும் என்றும் இல்லையெனில் தங்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்து, தற்காத்துக் கொள்ள, அனுமதிப் பத்திரத்துடன் ஆயுதங்கள் வழங்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள் ளனர். (அ-2)

# யுத்த காலத்தில் கூட பொருட்களின் விலை இவ்வளவு உயர்வடையவில்லை

## எதிர்க்கட்சி தலைவர் அதிசயம்

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் கூட பொருட்களின் விலை இவ்வளவு உயர்வடையவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிகவரெட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

யுத்தத்திற்காக செலவிடப்பட்ட பணம் எங்கே? கப்பல்கள் செல்லாத துறைமுகங்கள், விமானங்கள், தரையிறங்காத விமான நிலையங்கள், பறவைகள் தங்கும் விளையாட்டு அரங்குகள் இவற்றையா அபிவிருத்தி என்று கூறுகிறோம். அரசாங்கம் ஊழல் மோசடிகளையே அபிவிருத்தி செய்துள்ளது. இவற்றைப் பொறுத்தது போதும் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும்.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாவிட்டாலும் இத்தேர்தலில் அரசாங்கத்துக்கான வலுவான செய்தி ஒன்றை வெளிப்படுத்த மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மன்னார் சிறுதோப்பு கிராம மக்கள் கடற்படைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

மன்னார், சிறுதோப்பு கிராம மக்கள் இலங்கை கடற்படையினருக்கு எதிராக அமைதியான ஆர்ப்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இந்த கிராமத்தின் 17 ஏக்கர் காணிப் பரப்பை இலங்கை கடற்படையினர் சுயதேவைக்காக அபகரித்துக் கொண்டுள்ளமைக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த காணியில் இருந்து கடற்படையின் கஜபா தளத்தை உடனடியாக அகற்றுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இதேவேளை, 10 வருட காலமாக கடற்படையினரால் அத்துமீறி அபகரிக்கப்பட்டுள்ள இந்தக் காணிப் பகுதியை சட்ட ரீதியாக கடற்படையினருக்கு வழங்க அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை காணிப் பிரச்சினை வடக்கில் மாத்தி ரம் அல்ல தெற்கில் அம்பாந்தோட் டையிலுமுள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எனவே, இப்பிரச்சினை வடக்கிற்கு மட்டுமே உரியது என்று கூறுவது அப்பட்டமான அரசியல் நோக்கம் என்று ஜனாதிபதி விமர்சித்துள்ளார்.

அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளும் போதும் அதற்கு நிகராக முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதும் இவ்வாறு காணிகள் கையேற்கப்படுவது சாதாரணமான விடயம் என்றும் அவர் இதன் போது தெரிவித்துள்ளார். (அ-2)

# வடக்கு மாகாண மக்களுக்கு தேர்தலில் ஆர்வம் குறைவு

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

வடமாகாண தேர்தல் தங்கள் வாழ்க்கையில் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தும் என்று வடமாகாண தமிழ் மக்கள் கருதவில்லை என்று தேர்தல்கள் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு வடக்கில் தேர்தல்கள் தொடர்பில் கடந்த செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நடத்திய ஆய்வு ஒன்றின் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள சில சமூக குழுக்கள், இந்த தேர்தலில் பங்கு பற்றுதல் முக்கியமானது என்பதை உணர்ந்துள்ளன.

எனினும் இந்தத் தேர்தல் தங்களின் வாழ்க்கையில் முக்கியமான தீர்வை வழங்கும் என்று அங்குள்ள பெரும்பாலான மக்கள் கருதவில்லை என்று அழைப்பின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை தேர்தல்கள் இடம்பெறுகின்ற ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது வடக்கில் தேர்தல் சார்ந்த வன்முறைகள் குறைவாகவே பதிவாகியுள்ளன.

தேர்தல் தொடர்பான போட்டி நிலைமை அங்கு குறைவாக காணப்படுகின்றமையே இதற்கான காரணம் என்று குறித்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் வடமாகாண மக்களின் நாளாந்த வாழ்க்கையில் இராணுவத்தினரின் பிரசன்னம் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# பொலிஸார் மீது கபே அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொலிஸார் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுகின்றார்களா அல்லது அகற்றுகின்றார்களா என கபே தேர்தல் கண்காணிப்பு அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் சட்டவிரோத சுவரொட்டிகளை அகற்ற நியமிக்கப்பட்ட பொலிஸார் விசித்திரமான முறையில் கடமையாற்றுகின்றனர்.

இதுதொடர்பில் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சட்டவிரோத சுவரொட்டிகளை அகற்றிய சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆளும் கட்சியின் பிரபல வேட்பாளர் ஒருவரின் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்ததாக கபே குற்றம் சுமத்தியுள்ளது.

இதேவேளை இந்தக் குற்றச்சாட்டு அடிப்படையற்றது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# 17 09.2013 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖ 1631 - ரோமப் பேரரசுடனான 30 ஆண்டுகள் போரில் சுவீடன் பிறைட்டென்ஃபெல்ட் என்ற இடத்தில் பெரும் வெற்றி பெற்றது.
- ❖ 1787 - ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பு பிலடெல்பியாவில் கையெழுத்திடப்பட்டது.
- ❖ 1789 - வில்லியம் ஹேர்ச்செல் மைமாஸ் என்ற துணைக்கோளைக் கண்டுபிடித்தார்.
- ❖ 1795 - மேஜர் பிரேசர் என்பவரது தலைமையில் பிரித்தானியப் படைகள் மட்டக்களப்பை ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றின.
- ❖ 1809 - பின்லாந்து போரில் சுவீடனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது. பின்லாந்து ரஷ்யாவிடம் கையளிக்கப்பட்டது.
- ❖ 1858 - ஆழ்கடல் தொலைத்தந்திச் சேவை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது.
- ❖ 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: மேரிலாந்தில் கூட்டமைப்பினருக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற போரில் 4 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். இதுவே அமெரிக்காவில் ஒரே நாளில அதிக இரத்தக் களறியை ஏற்படுத்தி போராகும்.
- ❖ 1908 - ஓர்வில் ரைட்டின் வானூர்தி தரையில் மோதியதில் அதில் பயணம் செய்த "தொமஸ் செல்ஃபிரிட்ஜ்" என்பவர் கொல்லப்பட்டார். விமான விபத்தில் உயிரிழந்த முதலாவது மனிதர் இவராவார்.
- ❖ 1929 - லித்துவேனியாவில் இடம்பெற்ற புரட்சி ஒன்றில் ஜனாதிபதி ஆகுஸ்டீனஸ் வொல்டெமாரெஸ் பதவியிழந்தார்.
- ❖ 1939 - சோவியத் ஒன்றியம் போலந்தின் மீது படையெடுத்து கிழக்குப் பகுதியைக் கைப்பற்றியது
- ❖ 1956 - அவுஸ்திரேலியாவில் முதன் முதலாக தொலைக்காட்சி காண்பிக்கப்பட்டது.
- ❖ 1974 - வங்காள தேசம், கிரெனடா, கினி-பிசாவு ஆகியன ஐ.நா.வில் இணைந்தன.
- ❖ 1976 - நாசா தனது முதலாவது மீள் விண்ணோடமான எண்டர்பிறைசஸ் பற்றிய தகவல்களை வெளியிட்டது.
- ❖ 1978 - இஸ்ரேல், எகிப்து ஆகியன காம்ப் டேவிட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- ❖ 1980 - போலந்தில் சொலிடாரிற்றி தொழிற்சங்கம் உருவாக்கப்பட்டது.
- ❖ 1980 - நிக்கராகுவாவின் முன்னாள் ஜனாதிபதி அனாஸ்டாசியோ சொமோசா டெபாயில் பராகுவேயில் படுகொலை செய்யப்பட்டார.
- ❖ 1991 - லினக்ஸ் இயங்குதளம் (0.01) இணையத்தில் கிடைத்தது.
- ❖ 1997 - பெரியார் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- ❖ 2004 - இந்தியாவில் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

- ❖ 1879 - ஈ. வெ. ரா. பெரியார், திராவிடர் கழகத் தந்தை (இ. 1973)
- ❖ 1897 - வில்லியம் கோபல்லாவ, இலங்கையின் ஆளுநர், முதலாவது ஜனாதிபதி (இ. 1981)
- ❖ 1989 - வ. ரா., மணிக்கொடி எழுத்தாளர்
- ❖ 1906 - ஜே. ஆர். ஜெயவர்த்தனா, இலங்கையின் முதலாவ்து நிறைவேற்று ஜனாதிபதி, (இ. 1996)
- ❖ 1930 - லால்குடி ஜெயராமன், வயலின் மேதை (இ. 2013)
- ❖ 1944 - ரைன் மெஸ்னர், இத்தாலிய மலையேறுநர்

### இறப்புகள்

- ❖ 1665 - நான்காம் பிலிப், ஸ்பெயின், போர்த்துக்கல், இலங்கை மன்னன் (பி. 1605)
- ❖ 1948 - ரூத் பெனடிக்ட், அமெரிக்க மனிதவியலாளர் (பி. 1887)
- ❖ 1953 - வி. க., தமிழறிஞர் (பி. 1883)
- ❖ 1994 - கார்ல் பொப்பர், ஆஸ்திரிய மெய்யியலாளர், (பி. 1902)

### ஈ. வெ. இராமசாமி



பெரியார் என பொதுவாக பலராலும் பேசப்படும் ஈ. வெ. இராமசாமி சமூக சீர்திருத்ததிற்காகவும், சாதி வேற்றுமையை அகற்றுவதற்காகவும், மூடநம்பிக்கைகளை மக்களிடமிருந்து களைவதற்காகவும், பெண் விடுதலைக்காகவும் போராடியவர். தமிழகத்தின் மிக முக்கியமான இயக்கமாகக் கருதப்படும் திராவிடர் கழகத்தினைத் தோற்றுவித்தவர். இவருடைய சுயமரியாதை இயக்கமும், பகுத்தறிவுவாதமும் மிகவும் புகழ்பெற்றது. இவர் வசதியான, உயர்சாதியாகக் கருதப்பட்ட நாயக்கர் என்ற சமூகத்தில் பிறந்திருந்தும், சாதிக் கொடுமை, தீண்டாமை, மூடநம்பிக்கை, வர்ணாஸ்ரம தர்மம் கடைப்பிடிக்கும் பார்ப்பனியம், பெண்களைத் தாழ்வாகக் கருதும் மனநிலை போன்றவற்றை எதிர்த்து மக்களுக்காகக் குரல் கொடுத்தார்.

இம்மனநிலை வளரக் காரணமானவை மக்களிடையே இருக்கும் மூடநம்பிக்கையும், அந்த மூடநம்பிக்கைக்குக் காரணமாக இருக்கும் கடவுள் நம்பிக்கையும், கடவுள் பெயரால் உருவான சமயங்களும் தான் என்பதை கருத்தில் கொண்டு ஈ.வெ.ரா, தீவிர இறைமறுப்பாளாராக இருந்தார். இந்திய ஆரியர்களால் தென்னிந்தியாவின் பழம்பெருமை வாய்ந்த திராவிடர்கள் பார்ப்பனரால்லாதார் என்ற ஒரு காரணத்தினால் புறக்கணிக்கப்படுவதையும், அவர்களால் திராவிடர்களின் வாழ்வு சுரண்டப்படுவதையும் பெரியார் எதிர்த்தார். அவர் தமிழ்ச் சமூகத்திற்காகச் செய்த புரட்சிகரமான செயல்கள், மண்டிக்கிடந்த சாதிய வேறுபாடுகளைக் குறிப்பிடத்தக்க வகையில் அகற்றியது. தமிழ் எழுத்துகளின் சீரமைவுக்குப் பெரியார் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளார். இவரின் சமுதாயப் பங்களிப்பைப் பாராட்டி யுனெஸ்கோ நிறுவனம் "புத்துலக தொலைநோக்காளர், தென்கிழக்காசியாவின் சோக்கிரடிஸ், சமூக சீர்திருத்த இயக்கத்தின் தந்தை, அறியாமை, மூடநம்பிக்கை, அர்த்தமற்ற சம்பிரதாயங்கள், மட்டமான பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் கடும் எதிரி" என பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கியுள்ளது.

இவருடைய பகுத்தறிவு, சுயமரியாதைக் கொள்கைகள் தமிழ்நாட்டின் சமூகப் பரப்பிலும், தமிழக அரசியலிலும் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இவர் ஈ.வெ.ரா, ஈ.வெ.இராமசாமி நாயக்கர், தந்தை பெரியார், வைக்கம் வீரர் என்ற பெயர்களாலும் அறியப்படுகிறார். பெரியார் 1973 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி இயற்கை எய்தினார்.

# மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து 56 பேர் தாயகம் திரும்பினர்

மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் நிமிர்த்தம் சென்று அங்கு நிர்க்கதிக்குள் ளாகியிருந்த 56 இலங்கைப் பயணியா ளர்கள் மீண்டும் நாட்டுக்கு திருப்பியனுப் பப்பட்டுள்ளனர்.

மூன்று விமானங்களில் இவர் கள் நேற்று காலை 7 மணியள வில் கட்டுநாயக்க விமான நிலை யத்தை வந்தடைந்த தாக விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின் றன.

இவ்வாறு நாடு திரும்பியோ ரில் பெண்கள் மற்றும் ஆண்க ளும் அடங்குகின்றனர்.

சவுதி அரேபியாவிலிருந்து 33 பேரும் கட்டாரிலிருந்து 8 பேரும் ஜோர்தானிலிருந்து 15 பேரும் இவ் வாறு நாடு திரும்பியுள்ளனர்.

நாடு திரும்பியுள்ளோரில் ஒரு ஆண் மற்றும் 2 பெண்களின் மனநிலை பாதிக்க ப்பட் டுள்ளதாக வும் அவர்கள் தற் போது அங்கொடை மனநோயா ளிகள் வைத்தியசாலைக்கு அனுப் பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதேவேளை மற்றையோரு க்கு பணம் வழங்கி அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்ப வெளிநாட்டுவேலைவாய்ப்புப்பணி யகம் நடவடிக்கையெடுத்துள்ள தாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)







## நாகர் கோவில் மஹோற்சவம்


(தும்பளை)

வரலாற்று சிறப்பு மிக்க நாகர் கோவில் பூர்வீக நாக தம்பிரான் ஆலய மஹோற்சவத் திருவிழா கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெற்று வருகின்றது.

மஹோற்சவத்தின் விசேட நிகழ்வான கப்பல் திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாகர் கோவில் சமுத்திரத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து தேர்த் திருவிழா 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தீர்த்த உற்சவ விசேட பூசைகள் மறுநாள் திங்கட்கிழமையும் இடம்பெற்று 24 ஆம் திகதி அதிகாலை நாகர் கோவிலில் கடலில் தீர்த்த உற்சவமும் பின்னர் மாலை 2 மணியளவில் கேணித் தீர்த்தமும் இடம்பெறவுள்ளது. (அ-9-19)







# எய்ட்ஸ் தொற்றுக்கு முற்றுப்புள்ளி; நம்பிக்கை வெளியிடுகின்றனர் ஆய்வாளர்கள்



மனிதர்களிடம் எயிட்ஸ் நோயை தோற்றுவிக்கும் எச்.ஐ.வி வைரஸ் தொற்றை முற்றாக அழிக்கவல்ல சாத்தியக்கூற்றை தாங்கள் கண்டறிந்திருப்பதாக மருத்துவ ஆய்வாளர்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள்.

மனிதர்களின் எச்.ஐ.வி தொற்றுக்கு சமமான தொற்று குரங்குகளிலும் காணப்படுகிறது. குரங்குகளிடம் காணப்படும் இந்த தொற்றை எஸ்.ஐ.வி தொற்று என்று மருத்துவ விஞ்ஞானிகள் அழைக்கிறார்கள்.



சி.எம்.வி வைரஸ் எச்.ஐ.வி வைரஸ்

மனிதர்களின் எச்.ஐ.வி தொற்றைவிட நூறுமடங்கு அதிக வீரியம் மிக்க வைரஸ் குரங்குகளிடம் இந்த எஸ்.ஐ.வி தொற்றை ஏற்படுத்துகிறது.

இப்படியான எஸ்.ஐ.வி வைரஸ் தொற்றுக்கு உள்ளான குரங்குகளிடம் நடத்திய ஆய்வில், அந்த குரங்குகளின் எஸ்.ஐ.வி தொற்றை முழுமையாக இல்லாமல் செய்ய முடியும் என்று அமெரிக்காவில் இருக்கும் ஓரேகான் சுகாதார அறிவியல் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

சூழ்நிலை என்கிற ஆங்கில விஞ்ஞான சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருக்கும் இந்த ஆய்வின் முடிவுகளின்படி, எஸ்.ஐ.வி வைரஸ் தொற்றுக்குள்ளான 16 குரங்குகளுக்கு இந்த விஞ்ஞானிகள் தங்களின் புதிய தடுப்பு மருந்தை அளித்துள்ளனர்.

அதில் ஒன்பது குரங்குகளிடம் இருந்த எஸ்.ஐ.வி தொற்று முற்றாக இல்லாமல் போய்விட்டதாகவும் ஏனைய ஏழு குரங்குகளிடம் தங்களின் தடுப்பு மருந்து செயற்படவில்லை என்றும் கூறும் இந்த விஞ்ஞானிகள், இதே முறையை பயன்படுத்தி மனிதர்களின் எச்.ஐ.வி தொற்றுக்கான தடுப்பு மருந்தையும் கண்டுபிடிக்க முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.


இந்த ஆய்வுக்கு தலைமை தாங்கிய மருத்துவ பேராசிரியர் லூயிஸ் பிக்கர், குரங்குகளின் எஸ்.ஐ.விதொற்றை முற்றாக குணப்படுத்தி விட்டோம் என்று உறுதியாக மார்தட்டிக்கொள்ள முடியாது என்றாலும், இன்றைய நிலையில், பாதிக்கப்பட்ட 16 குரங்குகளில் ஒன்பது குரங்குகளின் உடலில் எஸ்.ஐ.வி வைரஸ் தொற்று முற்றாக இல்லாமல் போய்விட்டது என்றே எல்லா விதமான மருத்துவ பரிசோதனைகளும் தெரிவிக்கின்றன. இது ஒரு முக்கிய, நம்பிக்கையளிக்கக்கூடிய சாதனை என்று குறிப்பிட்டுள்ளார்.

குரங்குகளை பாதிக்கும் இந்த எஸ்.ஐ.வி வைரஸ் மனிதர்களை தாக்கும் எச்.ஐ.வி வைரஸை விட நூறுமடங்கு தீவிரமானது. இதன் பாதிப்புக்குள்ளான குராங்குகள் இரண்டே ஆண்டுகளில் இறந்து விடுகின் றன. இரண்டு ஆண்டுகளுக்கு மேல் இவற்றால் உயிர் பிழைக்க முடியாத நிலை காணப்படுகிறது.




இப்படிப்பட்ட மோசமான வைரஸை குணப்படுத்துவதற்கு மருத்துவ ஆய்வாளர்கள் வேறொரு வைரஸின் உதவியைத்தான் நாடினார்கள் என்பது சுவாரஸ்யமான தகவல்.

பாலின நோய்களை தோற்றுவிக்கும் வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த சிஎம்வி என்று மருத்துவர்களால் அழைக்கப்படும் வைரஸை எடுத்துக்கொண்ட ஆய்வாளர்கள், இந்த வைரஸின் தீவிரமான பரவும் தன்மையை மட்டும் விட்டுவிட்டு,



அதன் நோய் உண்டாக்கும் தன்மையை நீக்கியுள்ளனர்.

விளைவு, இந்த குறிப்பிட்ட தடுப்பு மருந்தை குரங்குகளின் உடலில் செலுத்திய உடன், இந்த சி.எம்.வி வைரஸ்கள் குரங்குகளின் உடலில் தொற்றியிருந்த எஸ்.ஐ.வி வைரஸை தேடிப்போய் தாக்கி அழித்தன.

இந்த சி.எம்.வி வைரஸானது, இராணுவ வீரனைப் போல உடலின் ஒவ்வொரு கலத்திலும் சென்று அங்கிருக்கும் எஸ்.ஐ.வி வைரஸை தாக்கி அழிக்கிறது.

அதே சமயம், இந்த சி.எம்.வி வைரஸ் சில குரங்குகளின் உடலில் ஏன் செயற்படவில்லை என்பதற்கான விடை இதுவரையிலும் ஆராய்ச்சியாளர்களால் வழங்கப்படவில்லை.

எஸ்.ஐ.விக்கும் சி.எம்.விக்கும் இடையிலான போரில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு சமயம் சிஎம்வி வைரஸ் வெற்றி பெறுகிறது, அதேசமயம் மூன்றில் ஒரு சமயம்எஸ்.ஐ.விவைரஸ்வெற்றிபெறுகிறது.

இவ் ஆய்வின் முடிவுகளில் எச் ஐ வி தொற்றை முற்றாக குணப்படுத்த முடியும் என்கிற நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்துவதாக கூறும் பேராசிரியர் பிக்கர், குரங்குகளிடம் தாங்கள் கையாண்ட அதே அணுகுமுறையை மனிதர்களின் எச்ஐவி வைரஸ் தொற்றை குணப்படுத்தவும் கையாள முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேலும் இதற்கான அமெரிக்க அரசின் ஒப்புதல் கிடைக்கும் பட்சத்தில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் மனிதர்களின் எச்.ஐ.வி தொற்றுக்கான தடுப்பு மருந்தின் பரிசோதனைகள் இடம் பெறும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

# கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் குறித்து முறையிடப்படவில்லை

## தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முறைப்பாடு எதனையும் செய்யவில்லை என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வடமாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றை வெளியிட்டிருந்தது. இந்த விஞ்ஞாபனம் நாட்டை பிளவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளதாக ஆளும் கட்சி குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இது தொடர்பில் ஆளும் கட்சி இதுவரையில் எவ்வித உத்தியோகபூர்வ முறைப்பாடுகளையும் செய்யவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முதலமைச்சர் வேட்பாளர் சீ.வீ.விக்னேஸ்வரனுக்கு எதிராக ராவண பலய அமைப்பினால் மட்டும் ஓர் முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறாத வகையில் அனைத்து கட்சிகளும் சுயாதீனக் குழுக்களும் பிரசாரத்தை முன்னெடுக்க வேண்டுமென தேர்தல் ஆணையாளர் கோரியுள்ளார். (அ-2)




முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க நேற்றையதினம் கொழும்பு நீதவான் நீதிமன்றில் சட்டத்தரணிகளுடன் ஆஜராகியபோது:...

# ரயிலில் பற்றுச்சீட்டு வழங்க உத்தியோகத்தர்களில்லை

அனுராதபுரம், புதிய நகரம் புகையிரத நிலையத்தில் புகையிரதப் பற்றுச்சீட்டு வழங்குவதற்கு உத்தியோகத்தர் ஒருவர் இல்லாமை தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரஜரட்ட புகையிரதம் நேற்று காலை புகையிரத நிலையத்திற்கு வந்தபோதும், பயணிகளுக்கு பற்றுச்சீட்டுகள் வழங்கப்படவில்லை என புகையிரதப் போக்குவரத்து அத்தியட்சகர் எல்.ஏ. ரத்நாயக்க கூறினார்.

புகையிரத நிலையத்தின் ரயில்வே உப உத்தியோகத்தர் பணிக்கு சமுகமளிக்காமையே இதற்கு காரணமாகும்.



இதற்கமைய, புதிய நகரம் புகையிரத நிலையத்தில் ஏறிய பயணிகள் ஷ்ராவஸ்திபுர புகையிரத நிலையத்திலேயே தமக்கான புகையிரத பற்றுச்சீட்டை பெற்றுக்கொண்டனர் என தெரியவருகின்றது. (அ-2)

# வாகன விபத்தில் மூவர் உயிரிழப்பு




(தும்புள்ள)

வாகன விபத்தொன்றில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தம்புள்ளை - பக்கமுன வீதியில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. இது தொடர்பாகத் தெரியவருவதாவது.

மோட்டார் சைக்கிளும் லொறியும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது. பக்கமுனவில் இருந்து கண்டலம நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்று பேரே சம்பவத்தில் பலியாகியுள்ளனர்.

படுகாயமடைந்த நிலையில் கண்டலம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இளம் பெண்ணொருவர் உட்பட மூன்று பேர் இந்த விபத்தில் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# வடமாகாண சபைத்தேர்தல் - 2013
# முல்லைத்தீவு மாவட்டம்


## சோரம் போகாத எங்கள் மண்ணின் மைந்தன்.......

முதன்மை வேட்பாளர் முல்லைத்தீவு மாவட்டம்

**திரு. ம.அன்ரனி ஜெயநாதன்**

{ஓய்வு நிலை அதிபர் கோட்டக்கல்வி அதிகாரி}

{ உப செயலாளர் இலங்கை தமிழரசுக்கட்சி, மத்தியகுழு உறுப்பினர் }



அன்றும் இன்றும் என்றும்
எங்களுடன் எங்களுக்காய்
முல்லையின் விடி வெள்ளியாய்
அடக்கு முறையினை என்றும் எதிர்ப்பவனே
எங்கள் வாக்கு என்றும் உனக்கே.

-முல்லை மக்கள்-

(E-067)

## இலங்கை தமிழ் அரசுக்கட்சி

X 8



## வட மாகாண சபைத் தேர்தல் -2013
# யாழ். மாவட்டம்



தரைவழிப் பாதைகள் தடைப்பட்ட போது
உணவுக்காக மக்கள் திண்டாடிய வேளை
கடலாலும் வான்வெளியாலும்
உணவுப் பொருட்களைக் கொண்டு வந்து
உண்டி கொடுத்து உயிர் காத்த
உங்கள் பணியை
வசதிகள் மலிந்த இவ்வேளையில்
மறப்பது முறையோ!
நாம் இடருற்ற போது உதவிய
உங்களுக்கே



**எங்கள் வாக்கு**

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP)

# க. கமலேந்திரன்
## (தோழர் கமல்)

(யாழ். மாவட்ட அமைப்பாளர்)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

(EC/4893)

X 10

நன்றியுணர்வோடு யாழ். மாவட்ட தமிழ் மக்கள்.

# கடும் போக்குவாதத்திற்கு எதிராக நடவடிக்கை

## வலியுறுத்துகிறார் கோத்தா

(கொழும்பு)

கடும் போக்குவாதத்திற்கு எதிராக உலக அளவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிராந்திய மற்றும் உலக அளவில் கடும் போக்குவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் தொடர்ந்தும் கடும்போக்குவாத சவால்களை எதிர்நோக்கி வருகிறோம்.

கடும் போக்குவாதத்திற்கு எதிராக சர்வதேச நாடுகள் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால், அது நாடுகளின் ஸ்திரத்தன்மையை பாதிக்கும்.

பயங்கரவாதம், தீவிரவாதம், கடும் போக்குவாதம் ஆகியவற்றுக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை சார்க் பிராந்திய வலய நாடுகள் கூட்டாக இணைந்து ஆலோசித்தே உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# லிற் எக்ஸ்-2013 கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

லிற் எக்ஸ்-2013 கண்காட்சியும் வரலாறு மற்றும் ஆங்கில இலக்கிய விளக்கவுரையும் இன்று யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தில் புதிய கலைக் கட்டடத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வினை யாழ். பல்கலைக்கழக மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறை மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். (அ-4)


வடமாகாண சபைத் தேர்தல் 2013


யாழ். மாவட்டம் சுயேச்சைக் குழு 6



அன்ரனிப்பிள்ளை அந்தோனிஸ் யோகராசா

(யோகன்)

வாழ்வதற்கான பயணமா?
வீழ்வதற்கான பயணமா?
எமது பயணம் உலக அரங்கில் தமிழர்
உரிமைகளை காத்திட செல்கின்ற
வாழ்வதற்கான உரிமைப் பயணம்
உங்கள் தெரிவு சுயேச்சைக்குழு -6



X 3

(E069)



வடமாகாண சபைத் தேர்தல் 2013

யாழ். மாவட்டம் சுயேச்சைக் குழு 6



X 14


மாணிக்கசோதி அபிமன்னசிங்கம்

(மல்லாகம் ரவி)

உங்களுக்கான விடியலின் ஆரம்பம்
என நாங்கள் வருகின்றோம்
நாளை நாடு விட்டு செல்பவர்கள் அல்ல
நாம் உங்கள் மத்தியில் வாழ்பவர்கள்
உரிமைகளுக்காக நாம் செல்கின்ற பயணங்களை
பட்டியலிடவில்லை
அது எங்கள் வாழ்வின் மையம்
உங்களுக்கான ஒரே தெரிவாக
சுயேச்சைக்குழு 6 அமையட்டும்

(E-068)







வட மாகாண சபைத் தேர்தல் -2013

யாழ். மாவட்டம்

தமிழ் மக்களின் உரிமைகளை ஜனநாயக முறையில் பெற்றிட
தமிழ் மக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்திட
தமிழ் மக்களின் கலை கலாசார விழுமியங்களைப் பாதுகாத்திட
தமிழ் மக்களின் தனித்துவத்தினைப் பேணிட
ஓரணியில் திரள்வோம்.

மக்களுடன் மக்களாக வாழ்ந்து எமது அமைப்பின்
ஊடாக இதுவரை ஆற்றிய பணியை மாகாணசபை
ஊடாக மேலும் விரிவுபடுத்தி மக்களின் துயரங்களை நீக்க

தமிழன் என்ற தேசிய இனத்தின்
சுய கௌரவம் கிடைக்க வாக்களியுங்கள்..


(E-055)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர்

இ. ஜெயசேகரன்

(சமூக சேவையாளன்)

- தலைவர், யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கம் -



X 6

(E-055) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - யாழ். வர்த்தக நண்பர்கள் -

# துன்பப்படும் மக்களுக்கு சேவை செய்வதே அரசியல்..

# வட மாகாணசபை தேர்தல் - 2013



யாழ் மாவட்டம்



5
கந்தசாமி விதுஜா
பல்கலைக்கழக மாணவி


4
A.M.K.தில்லைமோகன்
எழுத்தாளர். வெளியீட்டாளர்


15
சசீஸ்கரன் (தம்பியன்)
முன்னாள் கடற்றொழிலாளர் சங்க தலைவர்
சாவற்கட்டு ஆனைக்கோட்டை


7
ஜேம்ஸ் ரவிசங்கர்
சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்
தொண்டமனாறு


14
உஷாந்தன்
சமய பிரசங்கி


12
ரவிசர்மா
ஆலய குருக்கள் - நல்லூர்


16
அன்ரன் ரவிசந்திரன்
மீனவர் சங்க செயலாளர்
சேந்தான்குளம்


17
சிறிபுஸ்பநாதன்
ஆட்டோ சங்க செயலாளர் (முன்)
யாழ் மாவட்டம்


10
பாலசிங்கம் அனிஜன்
பழைய மாணவன்
புனித பத்திரிசியார் கல்லூரி




அகிம்சை வழியில் போராடி முகாம் மக்களை விடுவித்தேன். யுத்தத்தில் மக்கள் இழந்த சொத்துக்களை மீளத்தர வேண்டும், இறந்தவர்களுக்கு நினைவுச்சின்னம் வைக்க வேண்டும், நினைவு தினம் அனுஷ்டிக்க வேண்டும், மக்களை சொந்த இடங்களில் மீள்குடியேற்றவேண்டும் என்றும் கேட்டு உண்ணாவிரதம் இருந்தேன். தமிழ் மக்களின் உரிமைக்காகவும், கடல் வளத்தை காப்பாற்றவும் ஒன்றல்ல இரண்டு தடவைகள் 1000கி.மீற்கு மேல் பாதயாத்திரை நடந்தேன். இவ்வாறான தன்னலம் கருதாத, விளம்பரத்தை விரும்பாத, உண்மைத் தொண்டனாகிய, மக்கள் சேவகனாகிய, எனக்கு உங்கள் ஒரு வாக்கை வழங்கி, மாகாணசபையில் பாதிக்கப்பட்ட மக்களின் குரலினை ஓங்கி வென்றெடுப்பதற்கும் ஒரு சந்தர்ப்பத்தினை வழங்குங்கள்.

உங்கள் வாக்கினை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் இரட்டை இலை சின்னத்திற்கும், விருப்பு வாக்கினை எனது இலக்கம் 13ற்கும் வழங்கி, தந்தை செல்வாவின் அகிம்சை வழிக்கு அங்கீகாரம் கொடுங்கள்.



## இரட்டை இலை உங்கள் சின்னம்


X 13

முதன்மை வேட்பாளர்
அகிம்சைப்போராளி
சகாதேவன் (சகா)
பழையமாணவன்
யாழ்-அச்சுவேலி மத்திய கல்லூரி
மன்னார்-புனிதசவேரியார் கல்லூரி

ஜனநாயக ஐக்கிய முன்னணி
போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கம்
வடக்கு மாகாணசபை தேர்தல் - 2013

"அச்சமில்லாத பிச்சையில்லாத தமிழ்ச் சமூகத்தை உருவாக்குவோம்"

# துன்பப்படும் மக்களுக்கு சேவை செய்வதே அரசியல்..

# வட மாகாணசபை தேர்தல் - 2013



கிளிநொச்சி மாவட்டம்


2
சிவகுமார்
சுகாதார பொலிஸ் அதிகாரி


7
கதிர்காமசாமி
சமூகசெயற்பாட்டாளர்


3
புவிலன் (புவி)
முன்னாள் பொருளாளர் ஒப்பந்தகாரர் சங்கம்
வடக்கு மாகாணம்


1
யோகா
சமூக செயற்பாட்டாளர்


6
பத்மநாதன்
தலைவர் - கடற்றொழிலாளர் சங்கம்
குமுழமுனை


4
றமணன்
சமூக செயற்பாட்டாளர்




அகிம்சை வழியில் போராடி முகாம் மக்களை விடுவித்தேன். யுத்தத்தில் மக்கள் இழந்த சொத்துக்களை மீளத்தர வேண்டும், இறந்தவர்களுக்கு நினைவுச்சின்னம் வைக்க வேண்டும், நினைவு தினம் அனுஷ்டிக்க வேண்டும், மக்களை சொந்த இடங்களில் மீள்குடியேற்றவேண்டும் என்றும் கேட்டு உண்ணாவிரதம் இருந்தேன். தமிழ் மக்களின் உரிமைக்காகவும், கடல் வளத்தை காப்பாற்றவும் ஒன்றல்ல இரண்டு தடவைகள் 1000கி.மீற்கு மேல் பாதயாத்திரை நடந்தேன். இவ்வாறான தன்னலம் கருதாத, விளம்பரத்தை விரும்பாத, உண்மைத் தொண்டனாகிய, மக்கள் சேவகனாகிய, எனக்கு உங்கள் ஒரு வாக்கை வழங்கி, மாகாணசபையில் பாதிக்கப்பட்ட மக்களின் குரலினை ஓங்கி வென்றெடுப்பதற்கும் ஒரு சந்தர்ப்பத்தினை வழங்குங்கள்.

உங்கள் வாக்கினை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் இரட்டை இலை சின்னத்திற்கும், விருப்பு வாக்கினை எனது இலக்கம் 13ற்கும் வழங்கி, தந்தை செல்வாவின் அகிம்சை வழிக்கு அங்கீகாரம் கொடுங்கள்.



## இரட்டை இலை உங்கள் சின்னம்


X 13

முதன்மை வேட்பாளர்
அகிம்சைப்போராளி
சகாதேவன் (சகா)
பழையமாணவன்
யாழ்-அச்சுவேலி மத்திய கல்லூரி
மன்னார்-புனிதசவேரியார் கல்லூரி

ஜனநாயக ஐக்கிய முன்னணி
போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கம்
வடக்கு மாகாணசபை தேர்தல் - 2013

"அச்சமில்லாத பிச்சையில்லாத தமிழ்ச் சமூகத்தை உருவாக்குவோம்"

E-072

# யாழில் 4 இலட்சத்து 26 ஆயிரத்து 703 பேர் வாக்களிக்கத் தகுதி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபைத் தேர்தலில் வாக்க ளிக்க தகுதியுள்ள வாக்காளர்களின் எண் ணிக்கையை ஒவ்வொரு மாவட்ட செயலகங் களும் அறிவித்துள்ளன.


இதற்கமைய, யாழ்.மாவட்டத்தில் 4 இலட் சத்து 26 ஆயிரத்து 703 பேரும், வவுனியா மாவட்டத்தில் 94 ஆயிரத்து 644 பேரும் மன் னார் மாவட்டத்தில்75 ஆயிரத்து 737 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 68 ஆயிரத்து 600 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 52 ஆயிரத்து 409 பேரும் வாக்களிக்கவுள்ள னர்.

அத்தோடு வாக்குச்சாவடிகளும் அந்தந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

அவற்றின் எண்ணிக்கையின் அடிப்படை யில் யாழ். மாவட்டத்தில் 526, கிளிநொச்சி மாவட்டத்தில் 95, வவுனியா மாவட்டத்தில் 89, மன்னார் மாவட்டத்தில் 70, முல்லைத்தீவு மாவட்டத்தில் 52 என்ற அடிப்படையில் வாக் குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

வடமாகாண சபை தேர்தலில் யாழ்.மாவட் டத்திலேயே அதிகமான வாக்காளர்கள் பதி வாகியுள்ளனர் என்பது சுட்டிக்காட்டத்தக் கது. (அ-9)



# யாழ்.நூலகம் எரிக்கப்பட்டமைக்கு மன்னிப்பு கோரினார் அமைச்சர் டளஸ்

(யாழ்ப்பாணம்)

**சிங்கள மொழிபேசும் மாணவர்களுக்கு தமிழ்மொழியையும் தமிழ்மொழி பேசும் மாணவர்களுக்கு சிங்கள மொழியையும் முன்னர் கற்றுக் கொடுத்திருப் பார்களாயின், தான் யாழ்ப்பாணத்துக்கு வந்து தமிழில் உரையாற்றியிருக்க முடியும் என ஆதங்கப்பட்ட இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவி ருத்தி அமைச்சர் டளஸ் அழகப்பெரும, யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டு சாம்பலாக்கப்பட்டமைக்கு 32 ஆண்டுகளுக்கு பின்னர் தான் யாழ்ப்பாணத்தில் வைத்து மன்னிப்பு கோருவதாக தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரிக் கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு யாழ். தொழில் நுட்ப கல்லூரி வளாகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமச்சர், தமிழில் உரையாற்றும் போது மேலும் தெரிவிக்கையில்,

உங்கள் தாய் மொழிமூலம் உங்களுடன் உரையாற்ற முடியாமைக்கு நான் மிகவும் வெட்கப்படுகிறேன், வேதனைப்படுகிறேன். இந்த நிலைக்கு என்னை ஆளாக்கியது இந்த நாட்டை முன்னர் ஆட்சி புரிந்த தலைவர் களே.

இச் சிறிய இலங்கைத் தீவில் வாழும் 20 மில்லியன் மக்கள் அனைவரும் பேசுவது 2 மொழிகளே. அதாவது சிங்களமும் தமிழு மாகும். ஆனால், அமைச்சர் டக்ளஸுக்கு சிங்கள மொழியில் உரையாற்றத் தெரியாது. டளஸுக்கு தமிழில் உரையாற்ற தெரியாது. இது என்ன வேடிக்கை...? இதேபோன்று வேடிக்கைகளை இந்நாட்டை இதற்கு முன்னர் ஆட்சி புரிந்த தலை வர்கள் செய்திருந்தாலும் அவையும் பெரிய தொரு வேடிக்கைகள்தான்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நினைத் தபடி, தீர்மானித்தபடி முன்னர் இந்நாட்டில் வாழ்ந்த சகல சிங்கள பிள்ளைகளுக்கு தமிழ்



மொழியையும், சகல தமிழ் பிள்ளைகளுக்கு சிங்கள மொழியையும் கற்றுக் கொடுத்திருந் தால், இன்று டளஸ் யாழ்ப்பாணத்திற்கு வந்து தமிழில் உரையாடி இருக்கலாம். நாளை டக்ளஸ் மாத்தறைக்கு வந்து சிங்களத்தில் உரையாடியுமிருப்பார்.

இந் நாட்டில் சிறுபான்மை, பெரும்பான்மை என்ற வித்தியாசம் இல்லாது எல்லோரும் ஒரே இனமாகத் திகழ வேண்டும் என்று கூறிய ஜனாதிபதியின் அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்களான நாம், வடக்கில் வாழும் பிள்ளைகளுக்காக இன்னுமொரு செயலை நடைமுறைப்படுத்துவதற்காகவே வருகை தந்துள்ளோம்.

யாழ்.பல்கலைக்கழகத்திற்குள் நுழைய முடியாது வேறு பல்கலைக்கழகங்களுக்கும் செல்லமுடியாத வெட்டுப் புள்ளி தகுதியைப் பெறாத மாணவர்களுக்கு பட்டப்படிப்பை பெற் றுக் கொடுப்பதற்காகவே இந்த பல்கலைக் கழக கல்லூரியை நாம் ஆரம்பிக்கின்றோம்.

இது நாம் முன்னேறுவதற்கு அன்றேல் தேர்தலுக்காக ஆட்களை ஏமாற்றுவதற்கு செய்தசெயலன்று. அடுத்து வரும் புத்தாண் டின் பின்பு இங்கு பயிற்சி நெறிகளை ஆரம் பிப்பது எமது நோக்கமாகவுள்ளது.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடைபெறும் காலமாகும். நான் உயர்தர வகுப்பில் படிக்கும் போது யாழ்ப்பாணத்தில் ஒரு தேர்தல் நடைபெற்றதாக எனக்கு இன் னமும் ஞாபகமுள்ளது.

அந்த தேர்தல் 1981 ஆம் ஆண்டு ஜுன் மாதம் நடைபெற்றது. அது யாழ்ப்பாண அபி விருத்தி சபை தேர்தலாகும்.

அதேநாளில்தான் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் குண்டர் குழு இங்கு வந்து யாழ்ப்பாண நூலகத்தை எரித்து சாம்பலாக் கியது.

ஜுன் 4 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலின் பெறுபேறுகள் ஜுன் 17 ஆம் திகதியிலேயே வெளிவந்தன.

ஆனால், 13 வாக்குப் பெட்டிகள் காணாமற் போயிருந்தன. அந்த அபிவிருத்தி சபை தேர்தல்தான் உலக வரலாற்றில் மிக மாசு பட்ட தேர்தலாகும்.

அந்ததேர்தல் தான் யாழ்ப்பாண இளை ஞர் சமுதாயம் தேர்தலில் நம்பிக்கை இழந்து புல்லட்டை (துப்பாக்கியை) தேர்ந்தெடுக்க வழி செய்தது. 32 ஆண்டுகளுக்கு பின்னர் தெற்கில் இருந்து வந்த ஒரு அரசியல்வாதி யாக நின்று அன்று ஐக்கிய தேசியக் கட் சியின் குழுவினால் நடத்தப்பட்ட அநியாயங் களுக்காக யாழ்ப்பாண மக்களிடம் மன்னிப் புக் கோர நான் தயாராக இருக்கிறேன்.

இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த தேர்தலை மிக நியாயமான முறையில் நடத்துவது இந்த நாட்டில் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காகவே.

வடக்கு மக்களுக்கு அவர்கள் தமது பிரதி நிதிகளை தேர்ந்தெடுப்பதற்கு நியாயமான முறையில் சந்தர்ப்பம் வழங்குவதே ஜனாதி பதியின் எதிர்பார்ப்பு ஆகும்.

1981 ஆம் ஆண்டில் நடைபெற்ற வன் முறை தேர்தலைபோல் வன்முறை மூலம் வெற்றியடைய வேண்டிய தேவை நமக்கு இல்லை. நியாயமான முறையில் நடந்தால் தான் வெற்றிக்கு மதிப்பு. அதனால் இன வாதம், பிரதேச வாதம் விளைவிக்கும் சக்தி களுக்கு இடம் கொடாது இலங்கை தேசத்தில் சகல இன மக்களையும் மதிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தை உங்களின் நண்பனாகவும் மற்றும் நம்பிக்கை யாளனாகவும் மதிக்குமாறு உங்கள் அனை வரையும் கௌரவமாக வேண்டுகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# விதை நெற்களை சுத்திகரிக்குக

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள விவசாயிகளில் தரம் குன்றிய விதை நெல்லை வைத்திருப் பவர்கள் அந் நெல்லை யாழ்.குடா விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்திலுள்ள விதை சுத்திகரிப்பு இயந்திரத்தினூடாக சுத்திகரிப்புச் செய்யுமாறு சங்கத் தலைவர் அறிவித்துள் ளார்.

கடந்த கால போகத்தின் போது பெய்த மழை காரணமாக தரம்குன்றிய விதை நெல்லே விவசாயிகளிடம் உள்ளது.

அத்துடன் விதை நெல்லுக்கு தட்டுப் பாடும் ஏற்பட்டுள்ளது.

எனவே, அவற்றின் விளைதிறனை மேற் குறிப்பிட்ட கூட்டுறவு சங்கத்தின் விதை சுத்தி கரிப்பு இயந்திரத்தின் மூலம் சுத்திகரிக்க முடியும்.

விதை நெல்லை சுத்திகரிப்புச் செய்ய ஒரு மூடை நெல்லுக்கு 120 ரூபா அறவிடப்பட வேண்டும்.

இதில் ஆர்வமுள்ள விவசாயிகள் சுத்தி கரிப்பு செற்பாட்டை மேற்கொள்ளுமாறு சங் கத் தலைவர் அறிவித்துள்ளார். (அ-9)

# நெற்செய்கை நிலப்பரப்பு இவ்வாண்டு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விவசாய குழுவினரால் நெற் செய்கைக்கான நிலப்பரப்பின் அளவு கடந்த வருடத்தை விட இவ்வருடம் அதிகரிக்கப்பட வுள்ளது.

கடந்த வருடம் நெற்செய்கைக்கான நிலப் பரப்பு 11 ஆயிரத்து 700 ஹெக்ரேயர் என திட்டமிடப்பட்டிருந்த போதும் 10 ஆயிரத்து 78 ஹெக்ரேயரில் மட்டுமே செய்கை மேற்கொள் ளப்பட்டது.

இதனால் விவசாய குழுவினர் இவ்வருடம் நெற்செய்கைக்கான நிலப்பரப்பை 11 ஆயி ரத்து 900 ஹெக்ரேயர் வரை அதிகரித்துள் ளனர்.

நெற்செய்கையை ஆரம்பிப்பதற்கு முதலில் தரை பண்படுத்தலை மேற்கொள்ளவேண்டி யுள்ளது.

இதற்கு பருவ மழை ஒழுங்கீனமாக உள் ளதால் விவசாயிகள் பல நெருக்கடிகளை சந் தித்து வருவதாக குறிப்பிடப்படுகிறது. (அ-9)

பிறரைக் குறைத்து மதிப்பிட வேண்டாம்.
அது உங்கள் உள்ளத்தின் மதிப்பைக் குறைக்கும்.
- இங்கர்சால்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உறக்கம் இல்லாத வேட்பாளரும் உறங்கி விழிக்கும் வாக்காளரும்

வடக்கு மாகாணத்திற்கான தேர்தல் பிரசாரங்கள் மிகவும் உணர்வுபூர்வமாக நடப்பதைப் பார்த்து உண்மையிலேயே மக்கள் பிரமித்துப் போயுள்ளனர்.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் வேட்பாளர்கள், அவர்களின் ஆதரவாளர்கள் இராப்பகலாக உறக்கம் மறந்து களத்தில் இறங்கி கடும் பிரசாரம் செய்கின்றனர்.

இந்தப் பிரசாரங்களைப் பார்க்கும்போது நிதிப் பயன்பாடுகள், திட்டமிடல்கள், உணவு விநியோகப் பணிகள், வாகனங்களின் ஒழுங்குபடுத்தல்கள், ஊர் ஊராகச் சென்று பிரசாரம் செய்யும் குழுக்களின் ஏற்பாடுகள், துண்டுப் பிரசுரங்களுக்கான வசன அமைப்புகள், பிரசார மேடைகளில் பேசுவதற்கான ஆயத்தப்பாடுகள், ஒத்திகைகள், சுவட்டங்களுக்கான ஒழுங்குபடுத்தல்கள், இரவிரவாக தேர்தல் பிரசார சுவரொட்டிகளை ஒட்டும் பணிகள், பொலிஸார் வருகின்றனரா? என்பதைக் கண்காணிப்பதற்கான ஏற்பாடுகள் எனப் பல்வேறு விடயங்களை வெற்றிகரமாகச் செய்து முடிப்பது என்பது சாதாரண விடயமல்ல.

இவ்வாறு தேர்தல் பிரசாரப் பணிகளை தேர்தலில் போட்டியிடுவோர் மிகச் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

சுருங்கக்கூறின் 18ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்குப் பின்பே ஆதரவாளர்கள் கண்ணோடு கண் மூடி உறங்குவார்கள் என்று கூறலாம்.

14 ஆண்டுகள் விழித்திருந்த இலட்சுமணன், இராமருக்கு பட்டாபிஷேகம் செய்கின்ற வேளையில் கண்மூடி உறங்கியதாகக் கூறப்படுகிறது அல்லவா? இங்கும் அப்படியானதொரு நிலைமையைக் காணமுடிகிறது.

ஆம்! இராமாயணத்தில் இராமர் உறங்கினார். இலட்சுமணன் விழித்திருந்தான்.

இராவணன் உறங்க முடியாமல் அலைந்து திரிந்தான். கும்பகர்ணனோ மூசிமூசி நித்திரை கொண்டான்.

ஆக, இராமன் -இராவணன் என்ற இரு நிலைப் பாத்திரங்களில் விழிப்பும் உறக்கமும் ஆதிக்கம் செலுத்தவே செய்தது.

இதுபோலத்தான் வடக்கின் இபோதைய நிலை.

வேட்பாளர்கள் உறங்க முடியாமல் புரண்டு புரண்டு என்ன முடிவு, என்ன முடிவு, தேர்தலில் எனக்கு என்ன முடிவு என்று முணுமுணுத்தபடி நித்திரையின்றி சதா சிந்தனை செய்கிறார்கள்.

ஆதரவாளர்கள் இலட்சுமணன் போல இல்லாவிட்டாலும் 18ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்குப் பின்னதாக உறங்கத்தான் போகிறார்கள்.

வாக்காளப் பெருமக்களாகிய எங்கள் தமிழ் மக்களோ அயோத்தி மாநகர மக்கள் போல, உறக்கமும் உறங்கா விழிப்புமாக தத்தம் இழப்புக்களை, காணாமல்போன உறவுகளின் நினைப்புக்களை சோகமாக மீட்டு அதில் மனம் சோர்ந்து உறங்கி விழிப்பதாக இருக்கின்றனர்.

ஓ! ஜனநாயகமே உன் பிரசவம் மிகவும் வலியது என்று எம்மால் உணரமுடிகிறது.

உன் பிரசவத்திற்கான பாடுகள் ஏகப்பட்டதாயினும் உன் பிறப்பின்போது உனக்குத் தீங்கு ஏற்படாமல் இருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


எல்லாவற்றுக்கும் மேலாக உன் பிரசவத்தின் போது உன்னைப் பராமரிக்க இருக்கும் தேர்தல் உத்தியோகத்தர்கள்தான் உன் டாக்டர்களும் மருத்துவப் பணியாளர்களும்.

இவர்கள் நேர்மையாக-நீதியாக தங்கள் பணியைச் செய்தால் உன் பிரசவம் சுகமாக-ஆரோக்கியமாக அமையும்.

இறைவன் அருள் புரியட்டும். இத்துணை கஷ்டங்களும் ஜனநாயகத்தைச் சுகப்பிரசவமாக்கட்டும்.

# அழுத்தங்களுக்கு மத்தியில் வடக்கு உத்தியோகத்தர்கள்

## வேட்பாளர் சீ.வீ.கே.குற்றச்சாட்டு



வடக்கு மாகாண சபை நிர்வாகம் அதன் அதிகாரிகள், உத்தியோகத்தர்களை கொத்தடிமைகளாக பாவிக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சீ.வீ.கே. சிவஞானம் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ். நாவாந்துறைப் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குற்றம் சுமத்தினார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபை நிர்வாகம் அனைத்தும் உத்தியோகத்தர்களை கொத்தடிமைகளாக பயன்படுத்துகின்ற ஒரு நிலை இருக்கின்றது. அந்த நிலையிலிருந்து நாங்கள் அரச உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் எல்லோரையும் மீட்டெடுக்கின்ற ஒரு தேவை தற்போது இருக்கின்றது.

அதனால் அதற்கு பின் தூண்டுதலாக நாம் இருக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அரசியல் பழிவாங்கல்கள், அச்சுறுத்தல்களுக்கு அரச உத்தியோகத்தர்கள் ஆளாக்கப்படுகின்றார் கள். சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் நாங்கள் சொல்லிக் கொள்வது என்னவெனில் இம் மாதிரியான அழுத் தங்கள் அடாவடித்தனங்களில் இருந்து உங்களை மீட்டெடுக்க வேண்டிய தேவை எங்களுக்கு இருக்கின்றது.

அதிலிருந்து நீங்கள் துணிச்சலாக எதிர்த்து நிற்பீர்களாயின் அரசியல் செய்ய வேண்டாம். அரசியலில் பங்கெடுக்கக்கூடாது என்று சொல்லிக் கொண்டு ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு உத்தியோகத்தர்களை அழைத்து அரசி யல் செய்கின்ற சூழ்நிலை மாறும்.

உங்களுக்கு பின்னால் உங்களு க்கு பாதுகாப்புக்காக கூட்டமைப்பு நிற்கும் என்பதையும் நீங்கள் தயவு செய்து புரிந்து கொள்ள வேண்டும் என்றார். (அ-6)

# சுயநிர்ணய உரிமையை கூட்டமைப்பு பெற்றுவிடும் என அரசு அச்சப்படுகிறது

## த.தே.கூ.வேட்பாளர் வே.சிவயோகன்



இலங்கை இந்திய ஒப்பந்தமானது பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் போன்றதல்ல நினைத்தவுடன் கிழித்தெறிவதற்கு. இது இரு நாட்டு ஒப்பந்தம். சர்வதேச மயப்படுத்தப்பட்ட ஒப்பந்தம். இந்தியாவின் ஒப்பு தலின்றி மாற்றம் செய்யமுடியாது. இவ்வாறு வடமாகாண சபைத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் வே.சிவயோகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

வேலைவாய்ப்புத்தேடி அரசு சார்பு அரசியல்வாதிகளிடம் அலைந்து திரிந்த இளைஞர்களின் மாயை விலகி வருகின்றது.

அமையவிருக்கும் வட மாகாண அரசினூடாக கல்வித் தகைமைக்கேற்ப வேலை வாய்ப்புக்கள் கிடைக்குமென இளைஞர்கள் நம்புவதன் காரணமாக நம் இளைஞர்கள் தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவளிக்க முன் வந்துள்ளனர்.

இந்த இளைஞரின் ஆதரவூடாக அஹிம்சை வழிப் போராட்டம் வீறுபெ ற்று சமஷ்டி அரசியலமைப்பினூடாக இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்க ளில் தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை கொண்ட தமிழ்த்தேசியத்தை அடைந்து விடுவார்கள் என அரசு அச்சப்படுகின்றது.

தற்போது தாராளமாக பணத்தை அள்ளி இறைத்து தேர்தல் பிரசாரங்கள் நடத்தப்படுகின்றன.

பலவருடங்களாக செப்பனிடப்படாத வீதிகள் தேர்தல் காலத்தில் அவசர அவசரமாகச் செப்பனிடப்படுகின்றன. தேர்தல் காலத்திலாயினும் இவ் வீதிகள் செப்பனிடப்படுவது மக்களுக்கு நன்மையே.

ஆயினும் அமையவிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசினூடாக மாகாண சபைக்குரிய வீதிகளும் பிரதேச சபைக்குரிய வீதிகளும் கூடிய விரைவில் சர்வதேச நிதியுதவியுடன் செப்பனிடக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகவேயுள்ளன.

எதிர்வரும் தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் தமது வாக்குகளை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திற்கு புள்ளடியிட்டு அரச எதேச்சதிகாரத்திற்கு முடிவு கட்ட திடசங்கற்பம் பூண்டுள்ள னர் எனக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# தமிழ் மொழி உச்சரிப்பில் தவறு விட்ட அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

தமிழில் சரியாக உரையாற்ற முடியாமைக்கு கவலைப்பட்ட அமைச்சர் டலஸ் அழகப்பெரும, பாடசாலைக்கு படிக்கச் சென்றமைக்கு படுக்கச் சென்றதாகக் கூறியதால் பரபரப்பு ஏற்பட்டதோடு மாணவர்களும் சிரித்து ஆரவாரப்பட்டனர்.

இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் பங்குபற்றலுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரிக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் யாழ். தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதில் தமிழில் உரையாற்றிய அமைச்சர், தான் பாடசாலையில் படுக்கும்போது இங்கு ஒரு தேர்தல் இடம் பெற்றதாக ஞாபகம் இருக்கிறது என்றார்.

இதன்போது நிகழ்வில் கலந்து கொண்டிருந்த மாணவர்கள் உட்பட அனைவரும் பெரும் சத்தத்தில் சிரிப்பொலியுடன் கை தட்டி ஆரவாரப்பட்டனர்.

இதன்பின்பு பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், பாடசாலையில் படிக்கும்போது எனத் திரும்பக்கூற அமைச்சரும் பாடசாலையில் படிக்கும்போது என திரும்ப தானும் கூறினார். (செ-6)

# வெளிநாட்டுக்கு செல்ல ஷிராணிக்கு தடை

முன்னாள் தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக நடக்கும் ஒரு வழக்கை விசாரிக்கும் மஜிஸ்திரேட் நீதிமன்றம் முன் அனுமதியின்றி அவர் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளத் தடை விதித்துள்ளது.

ஷிராணி பண்டாரநாயக்க தலைமை நீதிபதியாக இருந்த காலகட்டத்தில் அவர் சமர்ப்பித்திருந்த சொத்துக் கணக்கில் ஒரு வங்கிக் கணக்கு விடுவிட்டுப்போனது குறித்து இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தொடுத்த வழக்கு விசாரணை தொடர்பில் கொழும்பு பிரதான நீதவான் நீதி மன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கில் முன்னாள் தலைமை நீதிபதி குற்றவாளி என்று கண்டறியப்பட்டாலும் கூட அவருக்கு ஆயிரம் ரூபாய் தான் அபராதம் விதிக்க முடியும்.

எனவே இது அரசின் பழி வாங்கும் போக்கு என நீதிமன்றத்துக்கு வந்திருந்த இலங்கை சட்டவாதிகள் சங்கத்தின் தலைவரான உபுல் ஜெயசூரிய தெரிவித்தார்.

இந்த வழக்கின் அடுத்த கட்ட விசாரணை அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (செ-11)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## பொறுமையைக் கடைப்பிடி



❖ வாழ்வில் மேல் நோக்கி உயர்த்துவது அனைத்தும் நன்மை. முன்னேற்றத்தை தடுத்து கீழே தள்ளி வீழ்ச்சிக்கு உள்ளாக்குவது தீமை.

❖ நல்லொழுக்கம் என்பதில் சிறிதளவும் சுயநலம் இருப்பது கூடாது. எந்நிலையிலும் பொதுநலத்துடன் இருக்கப் பழகுங்கள்.

❖ இறைவனே ஏழையின் வடிவில் நம் முன் நிற்கிறான். அந்த ஏழையின் துன்பம் துடைப்பது நம் அனைவரின் கடமை.

❖ இறந்த உடலில் உயிர் மீண்டும் புகுவதில்லை. அதுபோல, இறந்த காலமும் மீண்டும் வரப்போவதுஇல்லை. நிகழ்காலமான இன்று வாழ்வதே முக்கியம்.

❖ பூமிதேவியைப் போல பொறுமையைக் கடைபிடியுங்கள். பொறுமையுடன் இருப்பவன் காலடியில் உலகமே கிடக்கும்.

❖ ஒற்றுமையுடன் இணைந்து பாடுபட்டு வளர்ச்சிப்பாதையில் முன்னேறுங்கள்.

# அடிப்படை வசதிகளின்றி குமுளமுனை பொதுச்சந்தை

(முல்லைத்தீவு)

**முல்லை.மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள குமுளமுனை பொதுச்சந்தை பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருவதாக வியாபாரிகளும் நுகர்வோரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

குமுளமுனை மத்தி கிராமத்தில் 1960 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இப்பொதுச் சந்தை மீள்குடியேற்றத்தின் பின்னர் கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கி வருகின்றது. இச்சந்தையை குமுளமுனை கிழக்கு, குமுளமுனை மேற்கு, குமுளமுனை மத்தி, தண்ணிமுறிப்பு, அளம்பில் தெற்கு (துங்கபுரம்) ஆகிய கிராம சேவையாளர் பிரிவில் வாழும் 26 கிராமங்களை சேர்ந்த 1048 குடும்பங்கள் பயன்படுத்துகின்றன.



போரால் பாதிக்கப்பட்ட இப்பொதுச் சந்தை வடக்கின் துரித மீள் எழுச்சித்திட்டத்தினால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் 16 இலட்சத்து 39 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது. ஆயினும் சந்தைக்கான அடிப்படை வசதிகள் எவையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

குறிப்பாக மின்சார வசதி இல்லை. சந்தையுள் அமைந்துள்ள கிணறு சுத்திகரிக்கப்படாமையால் குடிநீர் பிரச்சினையும் உள்ளது.

சந்தையைச் சூழ சுற்றுவேலி சீரான நிலையில் இன்மையாலும் சந்தைக்கு கதவுகள் பொருத்தப்படாமையாலும் கட்டாக்காலி நாய்களும் கால்நடைகளும் சந்தையை அசுத்தம் செய்கின்றன.

இப்பகுதியில் வாகன தரிப்பிடமும் அமைக்கப்படவில்லை. சந்தை வளாகம் சமதரையாக அல்லாது குன்றும் குழியுமாக உள்ளதால் மழை நீர் சந்தை வளாகத்தில் ஆங்காங்கே தேங்கி நிற்கின்றது.

கழிவுநீர் வழிந்தோடக் கூடியதாக கான்கள் அமைக்கப்படவில்லை. அத்தோடு சந்தைக்கு செல்லும் வீதியும் செப்பனிடப்படவில்லை.

மேலும் சந்தைக்கு காவலாளியும் இல்லை. தளபாட வசதி போதாது. சந்தைக்கழிவுகளை ஒழுங்கான முறையில் அகற்ற குப்பைத்தொட்டி வசதியுமில்லை.

எனவே, ஏகப்பட்ட குறைபாடுகளுடன் இயங்கும் இச்சந்தையின் நிலையைக் கருத்திலெடுத்து உரிய தரப்பினர் ஆவன செய்து தர வேண்டுமென சந்தைப் பாவனையாளர் அனைவரும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-267)

# தமிழ் எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டி

(குருமன்காடு)

ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் தனது பத்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி இலங்கை வாழ் எழுத்தாளர்களை முன்னிலைப்படுத்தி சிறுகதை போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இலங்கையில் வாழ்கின்ற எழுத்தாளர்களே பங்குபற்ற முடியும். வயதெல்லைகள் கிடையாது. ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே முழுப் பொறுப்புமாவர். சிறுகதை சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும். முன்னதாக ஊடகங்களில் வெளிவந்திருக்கக் கூடாது. சிறுகதைகள் ஏ-4 தாள்களில் கணனியில் பதிவு செய்யப்பட்டு 5,6 பக்கங்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும். சிறுகதைகளை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் mr. v.sivarasa, amwildhovel, 47 249,duisburg, germany. p.puththisikamani,mescheder str. 19, 59846 sundern,germany என்ற முகவரிக்கோ அல்லது v.sivarajah @arcor.de அல்லது ponmani @ hotmail.de மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம். இப்போட்டியில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று சிறுகதைகளுக்கு பணப்பரிசில், சான்றிதழ் வழங்கப்படும். முதலாவது பரிசாக 25 ஆயிரம் ரூபாவும் இரண்டாவது பரிசாக 15 ஆயிரம் ரூபாவும் மூன்றாவது பரிசாக 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும். மேலும் பன்னிரண்டு சிறுகதைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.




இலங்கை தமிழ் எழுத்தாளர்களின் ஆக்கங்களை வெளிக் கொணர்ந்து அவர்களை கௌரவிக்கும் முகமாக இச்சிறுகதை போட்டி நடைபெறவுள்ளது. தாயக வாழ்வியலை உலக மக்களுக்கு தெரியப்படுத்தும் நோக்கோடு இப்போட்டி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-250)



வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்திய அருணகிரிநாதர் விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சைவப்புலவர் செ.குணபாலசிங்கம் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம். (படம்:- குருமன்காடு செய்தியாளர்)

# கிரவல் பெற்றுக் கொள்ளமுடியாமையால் தடைப்பட்டிருக்கும் அபிவிருத்தி பணிகள்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலும் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலும் நடைபெற்று வந்த அபிவிருத்திக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு கிரவல்,மணல் போன்றவற்றை பெற்றுக் கொள்ளமுடியாத நிலையில் அனைத்து வேலைத்திட்டங்களும் அரைகுறையாக நிறுத்தப்பட்டுள்ளதால் பொதுமக்களுக்கு பாரிய இடைஞ்சல்களை ஏற்படுத்தியுள்ளது.

ஒப்பந்தகாரர்கள் வேலைகளை தொடர்ந்து மேற்கொள்ளாத காரணத்தினால் பல்வேறு வீதி விபத்துக்களும் ஏற்படுகின்றன.

இதேபோன்று பிரதேசசபைகள், பிரதேச செயலகங்களினால் யுனிசெப் நிதியினூடாக அத்தியாவசிய தேவை கருதி புனரமைப்பு செய்யப்பட வேண்டிய கிணறு திருத்தங்கள் மற்றும் சிறு வேலைத்திட்டங்கள் கிரவல் இன்மையை காரணம் காட்டி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. வீடற்றவர்களுக்கு இந்திய அரசாங்கத்தினாலும் சர்வதேச நிறுவனங்களாலும் வழங்கப்படும் வீட்டுத்திட்டங்கள் கூட வேலைகள் தொடராது அரைகுறையாக நிற்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை மாந்தை கிழக்கு துணுக்காய் பிரதேசத்தில் போதிய அளவான மணல், கிரவல், கருங்கல் போன்றவை காணப்படுகின்ற நிலையில் வியாபார தேவைகளுக்காக வேறு இடங்களுக்கு இவை நாளாந்தம் கொண்டு செல்லப் படுகின்றன. இதுதொடர்பாக அரசாங்க அதிபரிடம் பொது அமைப்புக்கள் முறையிட்டும் பலன் எதுவும் கிடைக் கவில்லை எனவும் பொது மக்கள் கவலையுடன் கூறுகின்றார்கள்.

எனவே, இவ்விடயத்தில் உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. (ம-15)

## வீதி புனரமைக்கப்படவில்லை

(முல்லைத்தீவு)

அளம்பில் கடற்கரை வீதி புனரமைக்கப்படாமையால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

ஒரு கீலோ மீற்றர் நீளம் கொண்ட இவ்வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் விபத்துக்கள் பல இடம்பெறும் சூழ்நிலை காணப்படுகிறது.

எனவே, துறைசார்ந்த அதிகாரிகள் இவ் வீதியை புனரமைத்துத் தரவேண்டுமென பயணிகள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

# பேருந்து சேவையை ஏற்படுத்தி தாருங்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மணலாறு பிரதேச செயலர் பிரிவிலும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள குமுளமுனை, அம்பலவன் பொக்கணை ஆகிய கிராமங்களிலும் இ.போ.ச. பேருந்து சேவை இடம்பெறவில்லை எனவும் இச்சேவையை ஏற்படுத்தித்தர வேண்டுமெனவும் பயணிகளும் அப்பகுதி மக்களும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.



மீள்குடியேற்றத்தின் பின்னர் முல்லைத்தீவில் இருந்து குமுளமுனை கிராமத்துக்கு முல்லைத்தீவில் இருந்து அம்பலவன் பொக்கணைக் கிராமத்திற்கும் இ.போ.ச. பேருந்து சேவை இடம்பெற்று வந்தது.

ஆனால், தற்போது இச்சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் இருந்து மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம், புத்தளம் ஆகிய வெளியிடங்களுக்கு இ.போ.ச. பேருந்து சேவை இடம்பெறுகின்ற வேளை முல்லைத்தீவு மாவட்டத்திற்குள்ளே உள்ள மேற்குறித்த இடங்களுக்கு பேருந்து சேவை இடம்பெறாமைக்கான காரணம் என்னவென அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இப் பேருந்து சேவை இடம்பெறாமையால் போரினால் பாதிக்கப்பட்ட இப்பகுதி மக்கள் அதிகளவு பணம், நேரம் என்பவற்றை செலவு செய்து பயணம் செய்ய வேண்டிய நிலையில் சிரமப்படுவதாக அப்பகுதி மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு இ.போ.ச. சபையினரிடம் வினவிய போது இப்பகுதி போக்குவர்த்தில் வருவாய் குறைவாக உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

எனவே, இம் மக்களின் நிலை கருதி இ.போ.ச. பேருந்து சேவையை ஏற்படுத்தி தர வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத் துள்ளனர். (ம-267)

# வடக்கு மாகாண...

இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் லூயிஸ் பீயற் யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயத்தை மேற் கொண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தல் நிலைவரம் குறித்து யாழ.ஆய ருடன் அவரது இல்லத்தில் மாலை 5 மணி யளவில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பினையடுத்து ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவித்த ஆயர் மேலும் தெரிவிக்கையில்,

• யாழ்ப்பாணத்தின் தற்போதய நிலவரம் தொடர்பாக அறிந்து செல்லும் நோக்குடன் வருகை தந்திருந்தார்.

நெதர்லாந்து அரசாங்கத்தின் உதவியுடன மேற்கொள்ளப்பட்டு வரும் மிகவும் முக்கியமான செயற்பாடுகளுக்கு நன்றி தெரிவித்திருந்தேன்.

அதாவது யாழ்பாணக் கோட்டையை திருத்தி அமைக்கும் செயற்பாடு நெதர்லாந்து அரசாங்கத்தினால்தான் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

மிகவும் நேர்த்தியாக யாழ்ப்பாணக் கோட்டை புனரமைப்பு பணிகள் இடம் பெற்று வருவதாகவும் குறிப்பிட்டேன்.

யாழ்.நகர்ப் பகுதியில் சுமார் 30 ஏக்கர் நிலப் பரப்பில் இந்தக் கோட்டையுள்ளது இந்தக் காலப்பகுதியில் யாருக்கு 30 ஏக்கர் நிலம் கிடைக்கும் ஆகவே இதை நேர்த்தி தியாக செய்வது எங்களுக்கு நன்மை பயக்கும். சுற்றுலாவுக்காக வருபவர்கள் அதனைப் பார்வையிட முடியும் இங்குள்ளவர்களும் அதனைச் சென்று பார்வையிட முடியும்.

அத்தோடு யாழ்.மாநகரசபையிடம் ஒப்ப டைக்க வேண்டும் அதனை அவர்கள் சரிவரப பயன்படுத்துவார்கள் என்றும் குறிப்பிட்டேன்.

மேலும் நடைபெறவுள்ள தேர்தலைப் பற்றி திரும்பத்திரும்ப என் னிடம் பல கேள்விகளை நெதர்லாந்துத் தூதுவர் எழுப்பியிருந்தார்.

அதாவது தேர்தல் எவ்வாறு சுமுகமாக இடம் பெறுமா? எனக் கேட்டபோது தேர்தல் சுமு கமாக எந்தவிதப் பிரச்சினைகளும் இன்றி இடம்பெறவேண்டும் மக்கள் நிர்ப்பந்தங்களுக் குட்படாமல் பலாதகாரத்திற்குட்படாமல் சுமுகமாக தேர்தல் நடைபெறவேண்டும் எனத் தெரிவித்தேன்.

இதன்போது எந்த கட்சி வெற்றி பெறும் என என்னிடம் மறுபடியும் ஒரு கேள்விளை எழுப்பியிருந்தார்.

அதற்கு பதிலளிக்கும் போது கடந்த காலத் தில் இடம்பெற்ற தேர்தல்களை அடிப்படையாக வைத்துக்கூறும்போது தமிழ்மக்களின்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் வென்றது.

இம் முறையும் அவ்விதம் தான் இடம்பெற வேண்டுமென எல்லோரும் விரும்புகின்றனர்.

என்னயிருந்தாலும் மக்கள் விரும்பும் கட்சிக்கு தங்கள் வாக்கினையளிக்க முடியும். 25 வருடத்திற்கு பிறகு வடக்கு மாகாணத் திற்கு தேர்தல் இடம்பெறுவதனால் மக்களுக்கு இதில அதிக ஆர்வம் உள்ளது. எல்லா மக்களும் வாக் களிக்க வேண்டுமென்று விரும்புகின்றனர்.

இராணுவமோ பொலிஸ் அதிகாரிகளோ தலையிடாமல் நல்ல படியாக தேர்தல் இடம் பெற உதவ வேண்டும் எனத் தெரிவித்தேன்.

இதற்கு பின்பு தனது கருத்தைக் கூறிய நெதர்லாந்துத் தூதுவர்,

மக்கள் எல்லோரும் தமது விருப்பத்திற்கு ஏற்ற வகையில் வாக்களித்து தமது பிரதி நிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும்.

அந்தப் பிரதிநிதிகளும் மக்களிற்கு அவசியமான காரியங்களை முன்வந்து செய்து எல்லா மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்ய வேண்டும் எனக் கூறியதாக ஆயர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# இலங்கையை...

தேவை ஜனாதிபதி உட்பட அரசிற்கு மட்டுமே உள்ளது என்று சர்வதேச சக்திகள் கூறுகின்றன.

சாதாரண மக்களின் நிலைப்பாடு அது அல்ல என்றும் அந்த சக்திகள் தெரிவிக்கின்றன. வடக்கு மாகாணத்திற்கு காணி மற்றும் பொலிஸ அதிகாரங்களை வழங்க வேண்டும் என்பதே நாட்டில் உள்ள சாதாரண மக்களின் விருப்பம் என அந்த சர்வதேச சக்திகள் தொடர்ந்தும் கூறுகின்றனர்.

சகல மாகாண சபைகளிலும் தோல்விய டைந்த காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்க வேண்டும் என்ற யோசனையானது வடக்கு மாகாணத்திலும் நிறைவேற்றப்பட மாட்டாது.

வடக்கு மாகாணத்திற்கு தனியான அதிகாரங்கள் வழங்கினால் வடக்கில் தனி நாடு உருவாகும். அரசாங்கத்திடம் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் இருக்கும் போதே நாட்டில் நடைபெற்ற போரை தோற் கடிக்க 30 வருடகாலம் சென்றது.

நான்கு ஜனாதிபதிகளின் ஆட்சிக்காலத் தில் தோற்டிக்க முடியாதுபோன பயங்கரவாத போரை முடிவுக்கு கொண்டு வர ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே நடவடிக்கை எடுத்தார்.

அத்துடன் பயங்கரவாதத்தில் இருந்து மீட்கப் பட்ட இந்த தீவை மீண்டும் பயங்கரவாத பூமி யாக மாற்ற எந்த விதத்திலும் இடமளிக்க போவ தில்லை என்றார். (செ-11)

# வாக்கு சேகரிப்...

கட்சியின் தலைவருக்கோ நாட்டின் தலைவருக்கோ பொருத்தமற்ற வேலை களை செய்யும் அளவுக்கு வங்குரோத்து நிலைமைக்கு சென்றுள்ளார்.

முல்லைத்தீவில் ஜனாதிபதி கலந்து கொண்ட தேர்தல் பிரசாரத்திற்காக மக்களை அழைத்து வர சாதிவாதம் பயன்படுத்தப்பட் டது. மேடைக்கு வந்த மக்கள் சாதிவாதம் காரணமாக எமக்கு பிரச்சினை இருப்பதாக கூறினர். இதனால் இந்த கூட்டத்திற்கு வந்த தாக அவர்கள் குறிப்பிட்டனர்.

நாட்டின் தலைவர் மாகாண சபை உறுப் பினர் என்ற நிலைக்கும் கீழே சென்று செயற் பட்டு வருகிறார். யாழ்தேவியை கிளிநொச் சிக்கு கொண்டு சென்றனர். அது நல்லது. கிளிநொச்சி ரயில் நிலையத்தை திறந்து வைத்து விட்டு என்ன கூறினார்?. வடக்கு மாகாண சபை எனக்கு வேண்டும் மாகாண சபை இல்லை என்றால் நான் இந்த மாகாணத்திற்கு சேவை யாற்ற மாட்டேன் என்று ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதியின் இந்த கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. போர் முடிந்தவுடன் நாம் கடந்த காலத்தை மறந்து விடுவோம், நாம் அனைவரும் ஒன்று என ஜனாதிபதி தெரி வித்தார். ஆனால் மாகாண சபையை தனக்கு வழங்காது போனால் சேவையாற்ற மாட்டேன் என்று தற்போது சொல்கிறார்.

இங்குதான் பிரிவினை உள்ளது. ஒரு புறம் இது வடக்கு மக்களுக்கு ஏற்படுத்தும் அச்சுறுத்தல். அத்தோடு இந்த தேர்தல் நேரத்தில் ரயில் நிலையத்தை திறப்பது இலஞ்சம் கொடுப்பது போன்ற விடயம். ஒழுக்க மான தலைவர்கள் எவரும் இப்படி செய்ய மாட்டார்கள்.

போருக்கு பின்னர் வடக்கு மக்களிடம் இருந்த சிறிய நம்பிக்கையையும் ஜனாதிபதி தனது பேச்சால் இல்லாமல் செய்து விட்டார். வடக்கு மக்கள் மீது பலவந்தம் கட்ட விழ்த்து விடப்படுகிறது. ஜனாதிபதியின் பேச்சை ஜே.வி.பி வன்மையாக கண்டிக்கின்றது.

சில இனவாத அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் தூண்டி வரும் இன, மத, குல, பிரதேசவாதங்களை ஜே.வி.பி நிராகரிக் கின்றது. இதற்கு பதிலாக நாங்கள் தேசிய ஐக் கியத்திற்காக போராடுவோம். அதற்கான ஒரே மாற்று ஜே.வி.பி மட்டுமே என்றார். (செ-11)

# ஜனாதிபதி...

நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத் துவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதியே வெளியிட்டுள்ளதால், ஜனாதி பதி வழங்கும் உத்தரவுகளில் தலையீடு செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை.

விடுதலைப் புலிகளினால் வடக்கில் புதைக் கப்பட்டிருந்த கண்ணி வெடிகளை அகற்றுதல் மற்றும் இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற் றும் பணிகள் முடிவடைந்த பிறகு தேர்தல் நடத் தக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத் திய பின்னரே ஜனாதிபதி அங்கு தேர்தலை நடத்த உத்தர விட்டுள்ளதாகவும் நீதியரசர் கூறினார். (செ-11)

# தமிழர்களின்...

இடம்பெற்ற யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கல்லூரிக்கான அடிக்கல்நாட்டும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இளைஞர்களின் கரங்களில் தான் இந்த நாட்டின் எதிர்காலம் உள்ளது. எனவே நாங்கள எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் இந்த மோதல்களோ யுத்தமோ இந்த நாட்டில் இடம் பெறக் கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# த.தே.கூட்டமைப்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆய்வு செய்தபோது நாட்டை இரண்டாக பிளவுபடுத்தும் பயணத் தை அந்த கட்சி மேற்கொண்டு வருவது தெளிவாகிறது.

தமிழக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ் ஞாபனத்தை தேர்தலுக்கு பின்னர் பயன் படுத்தினால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும். அதற்கு எதிரான பொருத்தமான மருந்துகள் அரசாங்கத்திடம் இருக்கின்றது.

அவர்கள் இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தை நாட்டை பிளவுப்படுத்த பயன்படுத்த மாட்டார்கள் என்றால் நான் மகிழ்ச்சியடைவேன். அவ்வாறு இல்லாவிட்டால் அரசாங்கம் தனது முடிவுகளை கடுமையாக்கிக் கொள்ளும் என்றார்.

இதேவேளை த. தே. கூட்டமைப்பின் தேர தல் விஞ்ஞாபனத்திற்கு எதிராக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நேற்று உயர்நீதிமன்றத்தில் மனுவொனறைத் தாக்கல் செய்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் அரசியலமைப்பு சட்டத்திற்கு விரோதமானது எனத் தெரிவித்தே தேசப்பற் றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அம்மனுவில் பிரதிவாதிகளாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம் பந்தன், பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனா திராசா மற்றும் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய ஆகியோர் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 157/7A(4) என்ற பிரிவின் கீழ் குறித்த விஞ்ஞாபனத்திற்கு எதி ராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சி களோ அமைப்புகளோ நாட்டை பிரிவினைக குட்படுத்தும் விடயங்களை முன்வைக்கக் கூடாது. இதனடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சட்டத்தை மீறியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பல கட்சி களைச் சேர்ந்த ஒரு கூட்டணிக் கட்சியாகும். அத்துடன், கூட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சியல்ல.

அக் கூட்டமைப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலேயே போட்டி யிடுகிறது. அரசியலமைப்பின் 157வது பிரிவின் படி தனிநாட்டுக்கான முனைப்புகளை மேற்கொள்வது சட்டவிரோதமானது. த.தே. கூட்டமைப்பு நேரடியாகவோ மறைமுகமாகவோ தனிநாட்டுக்கான கோரிக்கையினையே முன் வைத்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)





கண்டு பிடியுங்கள்!

இன்று மட்டும்

அரசியல் சிந்தனையாளர்களே! இவர் யார்? என்பதையும் இவருடைய வேட்பாளர் இலக்கத்தையும் SMS அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள்..

SMS to 0770571350

- நிர்வாகத் திறமை மிக்கவர்.
- மும்மொழிகளிலும் ஆற்றல் மிக்கவர்.
- எரிக்கப்பட்ட யாழ் பொது நூலகத்தை புனரமைப்பு செய்ய உழைத்தவர்.
- 1987-ம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபைக்கு தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டவர்.
- உள்ளூர் சமூக அமைப்புகளுடனும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் தொடர்புகளை வலுப்படுத்தியவர்.
- யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பெண்கள் ஆகியோரின் கல்வி மேம்பாட்டுக்கும், வாழ்வாதாரத்திற்கும் பணியாற்றி வருபவர்.
- யுத்தத்தின் போதும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட போதும் மக்களை நேரடியாகச் சென்று சந்தித்து வேண்டிய உடனடி உதவிகளைச் செய்தவர்.
- யுத்த காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு கூட்டுறவுத் துறை மூலம் உணவு விநியோகத்துக்கு வழிவகை செய்து பேருதவி செய்தவர்.
- உங்களுக்குத் தெரிந்தவர், உங்களைத் தெரிந்தவர்.

இவர் எமது வீட்டுச் சின்னத்தில் நிற்கும் வேட்பாளர்.

இவர் யார்?

இவர் யார் என்பதை நாளைய வலம்புரின் 11ம் பக்கத்தில் பார்க்கவும்.

(3968)



வட மாகாண சபைத் தேர்தல் -2013

யாழ் மாவட்டம்



தேர்தல் மழைக்கு முளைத்த
காளான்கள் அல்ல நாம்
காலம் தோறும் எம்மக்கள்
துயர் துடைத்தவர்கள் - எம்மக்கள்
வறுமை இருள்தனை வேருடன் சாய்க்க
ஒருமுறை சந்தர்ப்பம் தாருங்கள்
நாம் சாதனை படைப்போம்...!

அலெக்ஸாண்டர் சூசைமுத்து (சார்ள்ஸ்)

(சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்)

X 8

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP)

(E-079)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.